Reg. M. 2330

உ
சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 30 | துன்முகி மாசி 1957 பிப்ரவரி | இதழ் 2

போராட்டத்தில் வேதாந்தம் சீருட்டத்தில் சித்தாந்தம்

(ஆசிரியர்)

பண்டைக் காலத்தில் வடநாட்டில் ஒரு பெரிய போராட்டம் நிகழ்ந்தது. அது ஒரு தாயாதிச் சண்டை. ஒரு குடும்பத்தில் சொத்துக்களுக்காகத் தாயாதிகள் சண்டை பிடிப்பது போலவே ஒரு பெரிய அரச வம்சத்தில் இரு கட்சியினருக்குள் அரசியல் உரிமைகளைப் பற்றிப் பெரும் போர் விளைந்தது. நாட்டிலிருந்த மற்ற அரசர்களும் அதில் கலந்து கொண்டார்கள். ஒரு குறித்த நாளில் இரு கட்சியினரும் போர் அரங்கத்தில் சகல ஆயுதங்களுடனும் கூடிவிட்டனர். அவர்களில் ஒரு புகழ்பெற்ற சிறந்த வீரன் போர் அரங்கத்தில் தேரில் ஏறிப் போர் புரியத் தயாராக இருந்தான். அவன் சொற்படி தேர்ப்பாகன் தேரை இரண்டு சேனைகளுக்கும் இடையில் நிறுத்தினான். இரு புறங்களிலும் போர் வெறி கொண்டிருந்த தன் இனத்தாரைக் கண்டு இந்தப் பெரும் கூட்டத்து வீரர்கள் எல்லாம் இரண்டு கட்சிக்காரர்கள் கொண்ட மண் ஆசையினால் மடிகின்றார்களே! இவர்களைக் கொன்று நாம் என்ன பயன்

பெறுகின்றேம் என்று மனம் சஞ்சலமடைந்து தன் சாரதியை நோக்கிப் போர் செய்யமாட்டேன் என்று கூறி வில்லை நழுவவிட்டான். சாரதி கண்டு 'இது கோழைத் தனம், மற்றும் தன் கடமையைச் செய்வதே போர் வீர னுடைய நெறி' என்று கூறி உலக ஒழுக்கத்தைக் கூறு கிறுன். இவ்வுரை 18 அத்தியாயம் கொண்ட ஒரு வேதாந்த நூல் ஆகப் பெருகிவிட்டது. இது நமது நாட்டில் இயல் பாக எழுந்த ஒரு செய்தி. ஆனுல் மேல்நாட்டு வெள்ளையர் கள் இது இயற்கைக்கு மாறுனது என்பார்கள். போர்முனை யில் வேதாந்தம் எழும்புமா என்று ஐயுறுவார்கள். ஆனுல் இது நடந்திருக்கலாம் என்று நாம் நம்புகிறேம்.

இனி, சிருட்டத்தில் எப்படி சித்தாந்தம் விளைந்தது என் பதை ஆராய்வோம். ஆறு நூற்றுண்டுகளுக்கு முன் சிவா நதிக்கு அருகில் ஒரு புனித பாடல்பெற்ற தலத்தில் ஒரு பெரிய மாளிகைக்கு எதிரே பெருந் தெருவிலே சில அழகிய சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களிலே ஒரு பிள்ளை வசீகரக் கண்ணேட்டமும் வயதிற்கு மீறிய அறிவு விலாசமும் மிளிர்ந்து மலர்ந்த முகத்தைக் கொண் டிருந்தது. அக்குழந்தை அவ்வூர்த் தலைவன் மதலை. சிறு தேர் ஓட்டி விளையாடிக் கொண்டிருந்த அக்குழந்தை வான வீதியை அண்ணந்து பார்த்தது. அங்கே ஒரு புனிதப் பெரு மகனின் தோற்றம் கண்டது. அப்புனிதப் பெருமகனும் அக்குழந்தையைக் கண்டார். உடனே குழந்தை அருகில் வந்தார். குழந்தை பக்குவநிலை உணர்ந்து "குழந்தாய் சிறு தேர் உருட்டுவதில் மகிழ்ச்சி என்ன இருக்கிறது. பெருந் தேர் உருட்டி உலகையே ஈடேற்றுதல் மகிழ்ச்சி அல்லவா?" என்றுர்.

"எவ்வாறு அங்ஙனம் செய்யமுடியும்" என்றது குழந்தை.

"மக்களுடைய உள்ளங்களை ஒளிபெறச் செய்து விரிவு படுத்தின் அவைகளிலே சைவப் பெருந் தேர்களை விடலாம்" என்றுர்.

எவ்வாறு உள்ளங்களை ஒளிபெறச் செய்து விரிவு படுத்துவது? என்று குழந்தை கேட்டது.

" சில கேள்விகளைக் கேள், அவைகளுக்கு விடைகளை நீயே ஆராய்ந்து பார். உள்ளங்கள் அப்போது ஒளிபெறும்" என்றார் முனிவர்.

" என்ன அக்கேள்விகள் " என்றது குழந்தை.

" மைந்தா, விளையாடுகிற நீ யார்? முதற் கேள்வி. உன்னை விளையாட்டி வைக்கிறவன் யார்? அது இரண்டாம் கேள்வி. அவனை அறியாமல் விளையாடலே பெரிதாக உன்னை மயக்குகிறது அல்லவா அது எது என்பது மூன்றாம் கேள்வி.

' மைந்தா இம்மூன்று கேள்விகளுக்கும் விடை அறிந்தாயா? ஆம். அவைகள், நான், அவன், அது என்பவை ' என்றது குழந்தை.

சரி. ' இம்மூன்றின் தன்மைகளை அல்லது குணங்களை ஆராய்ந்து அறியவேண்டும் ' என்றார் முனிவர்.

வேறு கேள்விகள் உண்டா? என்றது குழந்தை.

' ஆம் மகனே, இம்மூன்றையும் அறிபவன் யார்? அறிவிப்பவன் யார்? அறியும் நிலை எது? இவைகள் 7, 8, 9 கேள்விகள். இவைகளுக்கும் மேலாக அறிந்து கொண்டால் நீ அடையும் பயன் என்ன என்பது மூவகை: ஆக 12 கேள்விகள் உண்டு. இவைகளில் விடைகளை நீயே ஆராய்வாய். பிறகு உலகிற்கு அறிவிப்பாய் என்று சொல்லி அருள் நோக்கால் நோக்கிவிட்டு முனிவர் மறைந்தார்.

அது முதல் அக்குழந்தை தன் சிறு விளையாட்டை ஒழித்துவிட்டு முனிவர் சொன்ன பெரும் விளையாட்டை ஆராயத் தொடங்கியது. அப்பன்னிரண்டு கேள்விகளுக்கும் விடைகள் தேடிற்று. முனிவருடைய அருள்நோக்கு பட்டிருந்ததினால் அவ்விடைகளையும் கண்டு பிடித்தது. பொதுமக்கள் அறியும்வண்ணம் சிறு சிறு சொற்களாலே அவ்விடைகளை அமைத்தது. அந்தவகையில் அமைந்த பன்னிரண்டு சூத்திரங்களே சிவஞானபோதம் என்ற மெய்கண்ட நூல் ஆயிற்று. ஆகவே விளையாட்டத்தில் விளைந்தது சித்தாந்தம் அல்லவா?

இந்தவகையில் ஒரு செய்தி நடந்தது என்று சொன்னாலும் மேல்நாட்டு வெள்ளையரும் தம் நாட்டுத் தற்கால

இளைஞர்களும் நம்பமாட்டார்கள். சிறு குழந்தையாவது சித்தாந்தம் எழுதுவதாவது என்பர். இங்கே குழந்தை என்பது அறிவுள்ள ஒரு இளைஞன் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவன் இந்தப் பன்னிரண்டு கேள்விகளைக் கேட்க மாட்டானா? இவைகளுக்கு விடைகளை அறியமாட்டானா? எந்தப் பகுத்தறிவுள்ள மனிதனும் நான் யார், என் தலைவன் யார், அவனை அறியாமல் தடுப்பது எது என்ற சிறு கேள்விகளைக் கேட்கமாட்டானா? இக்கேள்விகளும் இவற்றை ஒட்டி எழும்பும் மற்ற ஒன்பது கேள்விகளுமே சித்தாந்தத்தின் மூலம்.

தமிழ் மகன் பண்டைக்காலம் முதற்கொண்டே இக் கேள்விகளைக் கேட்டு விடைகளையும் ஆராய்ந்து வெளியிட்டான். இந்த ஆராய்ச்சியின் மூலமாக ஏற்பட்டதே சித்தாந்தம் ஆகும்.

இதனை ஆறு நூற்றாண்டுகளின் முன் மெய்கண்டதேவர் சொன்னார். அதனை அவருடைய மாணக்கர் அருணந்தி சிவம் விரித்தார். அதனை இன்னமும் பெரிதாக உமாபதி சிவம் பெருக்கினார். இம் மூவர் இயற்றிய நூல்கள் முறையே சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப் பிரகாசம் என்பன. இவைகளை ஒட்டி மற்றும் பதினொரு சிறு நூல்கள் சேர்ந்தன. இந்தப் பதினான்கு நூல்களே சித்தாந்த நூல்கள்.

இவைகளை ஒவ்வொரு பெருமகனும் அறியவேண்டும் அல்லவா? அதைக் காரணமாகக் கொண்டு புனித மடாலயத்தார்கள் அழகிய வடிவில் இந்நூல்களை ஒரு பதிப்பாக வெளியிட்டிருக்கிறார்கள். இது போற்றத்தக்க செய்தி. பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுவார்களாக.

---

*குறிப்பு:—இவ்வுரை சென்னைத் தருமபுர மடாலயத்துப் பிரசார நிலையத்தார் சித்தாந்த நூல்களை வெளியிட்டபோது ஆசிரியர் பேசியது.

சமாஜ
51-ஆம் ஆண்டு நிறைவு விழா

[G. கலியாணம், M. A., D. Econ.,]

சென்னைச் சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 51-ஆவது ஆண்டு நிறைவு விழாவும், அதன் அங்கமாக சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர் மாநாடுகளும் 30—12—56 முதல் மூன்று நாட்கள் திருப்பெண்ணாகடத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. ஆண்டு விழாவிற்கும் சைவர் மாநாட்டிற்கும் இலங்கை முன்னாள் அமைச்சர் திரு. சு. நடேசப்பிள்ளை அவர்கள், பி. ஏ., பி. எல். தலைமை வகித்தார்கள். சைவ மங்கையர் மாநாட்டிற்குத் திரு. ச. கற்பகவள்ளி, பி. ஏ., பி. எஸ். ஸி. (ஆனர்ஸ்) அவர்களும், சைவ இளைஞர் மாநாட்டிற்குத் திரு. புலவர். முருகவேள், பி. ஓ. எல்., அவர்களும் தலைமை வகித்தார்கள்.

நடு நாட்டின் பழம் பெரும் பாடல் பெற்ற பதிகளுள் ஒன்று திருப்பெண்ணாகடம். அப்பரடிகளுக்கு இறைவன் சூல இடபக் குறிகளைப் பொறித்தருளிய திருத்தலம். அறுபான் மும்மை நாயன்மார்களுள் கலிக்கம்ப நாயனார் வாழ்ந்த இடம். பொய் கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்கண்டார் பிறந்தருளப் பெற்ற பேறுடையது அவ்வூர். தலைவர்களையும், சொற்பொழிவாளர்களையும் வரவேற்று வளைவுகள் ஊர்த்தெருக்களில் நாட்டப் பெற்றிருந்தன. 'சிவ சிவ' என்ற அட்டைகள் வீடுகள்தோறும் தொங்கவிடப் பெற்றிருந்தன. எங்கும் சிவமயம். திரு. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்களுக்குச் சொந்தமான முத்துக்குமாரப் பூங்காவில் மாநாட்டுப் பந்தர் அமைக்கப்பெற்றிருந்தது. மாமரச் சோலை நீழலில் மேடை வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

30—12—56 முதல் நாள் காலை திருத்தூங்கானை மாடச் சுடர்க் கொழுந்தீசர் கோயிலிலும், களப்பாளர் மேட்டிலுள்ள மெய்கண்டார் ஆலயத்திலும் வழிபாடு நடந்தது. பிறகு தலைவர்களை ஊர்வலமாக மாநாட்டுப் பந்தருக்கு அழைத்துச் சென்றனர். தேவாரத் திருமுறைகள் ஓதிய பின் மாநாடு தொடங்கிற்று. திரு. ச. அரங்கசாமிப் பிள்ளையவர்கள் வரவேற்புரையை வாசித்தார்கள். திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் முன் மொழிய, திரு. ம.

பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் பின்மொழிய, திரு. நடேசப் பிள்ளையவர்கள் தலைமை யேற்றார்கள். சமாஜப் பொதுச் செயலாளர் திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள் ஆண்டு அறிக்கையை வாசித்தார்கள். தலைவரவர்கள் தம் பேருரையை நிகழ்த்தினார்கள். அதில், தாம் சென்ற ஆண்டு பொன் விழாவில் தலைமை வகித்தும் இவ்வாண்டு விழாவிலும் தலைமை வகிக்க நேர்ந்தது இறைவன் திருவருட் செயல் என்றும், சைவசித்தாந்த வரலாற்றில் தலைசிறந்த இடம் பெற்றிருக்கும் மெய்கண்டார் பிறந்த திருப்பதியில் மாநாடு கூடியிருப்பது மிக மகிழ்ச்சி தருகிற தென்றும், ஆனால் இந்திய தரிசன நூல்களில் சைவசித்தாந்தம் நல்ல இடம்பெறாமல் இருப்பது வருந்தத்தக்கதென்றும், சைவம் உலகத்தைத் தன்னுள் அடக்கிய சமயம் என்றும், அது எல்லா மதத்தினருக்கும் ஆதாரம் கொடுப்பதென்றும், வேற்று நாட்டு ஞானிகள், சைவசமய குரவர்களைப் போல் ஆனந்த பரவச நிலையை வெளியிட்டு அனுபவங்களைச் சொன்னதாகத் தெரியவில்லை யென்றும், பெண்ணாகடம் போன்ற பெரியோர் பிறந்த ஊர்களுக்குப் பெருமை கொடுக்காதது நம் நாட்டிலே தான் காணப்படுகிறதென்றும், நவரத்தினப் பேழை யிருந்தும் குருடன் காணமுடியாதவாறு போல புண்ணிய பூமியில் பிறந்தும் பயனடையாத பாவிகளாக இருக்கிறோம் என்றும், சமயக் கல்வியைப் பள்ளிகளில் கற்பிக்கவேண்டுமென்றும், சைவ சித்தாந்த வித்தியாபீடம் ஒன்றிருக்க வேண்டுமென்றும், கோயில் நிர்வாகிகள் தேவார திருமுறைகளை அறிந்து வளர்க்கவேண்டு மென்றும் ,சைவசித்தாந்த (இல்லற துறவற) போதகாசிரியர்கள் இருக்கவேண்டு மென்றும், இவைகள் எல்லாவற்றிற்கும் ஆவன செய்யச் சமாஜம் ஒரு ஊன்று கோலாக நின்று பணிசெய்யவேண்டும் என்றும் கூறிமுடித்தார்கள். கடவுள் வாழ்த்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிந்தன.

மாலை 4-மணிக்குப் பேரவை துவங்கிற்று. இறைவணக்கத்தின்பின், வித்துவான். திரு. அடிகளாசிரியர் அவர்கள் " சைவ சமய உண்மைகளும் தமிழ் நூல்களும் " என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள். பலநூற்றாண்டுகளுக்கு முன்பு பேய்போல இறைச்சி கள் இவைகளை உண்டு வாழ்ந்த மக்

களை உயர்நிலைக்கு கொண்டுவந்தது சமயம் என்றும், ஒழுக்கம், கல்வி, உயர் அறிவு இவை சமய வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்றும், உயிர் உடம்பு இரண்டையும் பேண வேண்டுமென்றும், வினையை ஊட்டும் கடவுள் சைவ சமயத்திலன்றிப் பௌத்தம் சமணம் இவைகளில் கிடையாதென்றும், உலகத்தை அழிக்கும் காலத்தில் கடைசியில் கடவுள்தான் இருப்பன் என்றும் தொல்காப்பியம், கம்பராமாயணம், சங்க இலக்கியம், வடமொழி நூல்கள் இவைகளினின்றும் மேற்கோள்கள் காட்டி விளக்கினார்கள்.

பின்னர் வித்துவான் திரு. செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள், "திருமுருகாற்றுப்படை - சைவசித்தாந்த விளக்கமே" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். திருமுருகாற்றுப் படையில் முன் மூன்று பகுதிகளில் இறைவனைப் பற்றியும், பின் மூன்று பகுதிகளில் அழியாமை பற்றியும் கூறப்படுகிறதென்றும், 'சேவடி படரும் செம்மல் உள்ளமொடு......நலம்புரி கொள்கைப் புலம் பிரிந்துறையும்' என்ற அடிகளில் நக்கீரர், இறை, உயிர், தளை இவைகளைக் குறிக்கிறார் என்றும், ஆன்மாக்களுக்குக் கேவலம், சகலம், சுத்தம் என்ற நிலைகள் உண்டு என்பது பரங்குன்றத்தில் தாமரை புகும் வண்டினங்களைப் பற்றிக் கூறுவதில் அமைந்துள்ளதென்றும் விளக்கமாகப் பேசினார்கள். தலைவர் அவர்கள் கருத்துரையுடன் கூட்டம் இரவு 8 மணிக்கு இனிது முடிந்தது.

31—12—56 இரண்டாம் நாட் காலையில் சைவ மங்கையர் மாநாடு தொடங்கிற்று. திரு. ச. கற்பகவள்ளியம்மையார் அவர்கள், தம் தலைமைப் பேருரையை நிகழ்த்தினார்கள். திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் 'விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்' என்பது பற்றியும், வித்துவான் மறை. திருநாவுக்கரசு அவர்கள் 'ஆதியந்தம்' என்பது பற்றியும், விழாத் தலைவர் திரு. நடேசப் பிள்ளையவர்கள் சைவ சமயத்தில் பெண்களின் பங்கு என்ன என்பதைப்பற்றியும் பேசினார்கள். தலைவியர் கருத்துரையுடன் சைவ மங்கையர் மாநாடு முடிவுற்றது.

மாலை 4-மணிக்கு சைவர் மாநாடு தொடங்கிற்று. வித்துவான் திரு. அருணை வடிவேல் முதலியார் அவர்கள் "திருத்தொண்டின் நெறி" என்ற தலைப்பில் அறிவு நெறி

அன்பு நெறி என்ற இரண்டு உண்டு என்றும், நம் சமயப் பெரியார்கள் வளர்த்த நெறியை நாம் கடைப்பிடிக்கவேண்டும் என்றும் கூறினார்கள். பின்னர் வித்துவான் திரு. அ. நடேச முதலியார் அவர்கள் " இன்றைய சமயப் பணி " என்று எடுத்துக்கொண்டு மற்ற மதங்களைப் போல் சைவ சமயத்திலும் சமய வாழ்வு, சமய அறிவு, சமயப் பிரசாரம் இவைகளைப் பரப்ப ஆவன செய்தல்வேண்டும் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு, வித்துவான் திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் 'அருள் இயக்கம்' என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றினார்கள். மேல்நாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடித்த உண்மைகளையும் நம் சைவ சித்தாந்த உண்மைகளையும் ஒப்பிட்டு, படங்களுடன் திருவருள் இயக்குவதால் எல்லாம் இயங்குகின்றன என்பதை விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். கடவுள் வாழ்த்துடன் இரவு கூட்டம் முடிந்தது.

1—1—57 மூன்றும் நாட்காலையில் சமாஜ அங்கத்தினர் காரியக் கூட்டம் நடை பெற்றது. காரியஸ்தர்கள் தேர்தல், தீர்மானங்கள் முதலியன நிறைவேறின. பின்னர் திரு. புலவர் முருகவேள் அவர்கள் தலைமையில் சைவ இளைஞர் மாநாடு நடைபெற்றது. தலைவர் அவர்கள் தம் தலைமைப் பேருரையை நிகழ்த்தினார்கள். அமுதமொழி திரு. சுவாமிநாதப் பிள்ளை அவர்கள் 'திருமந்திரம்' என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள். தலைவர் கருத்துரையுடன் இளைஞர் மாநாடு முடிவடைந்தது.

மாலை 4-மணிக்கு சைவப் பேரவை கூடிற்று. திருவாளர்கள் சாம. இராமலிங்கம், க. வச்சிரவேல் முதலியார் இவர்கள் முறையே, 'திருவண்டப் பகுதியின் நுட்பம் - மாணிக்கவாசகர் பேறு' 'நம்பியாண்டார் நம்பிகள்' என்னும் பொருள்களைப் பற்றிப் பேசினார்கள். தலைவரவர்கள் தம் விரிவான கருத்துரையை நிகழ்த்தினார்கள். வரவேற்புக் கழகச் சார்பில் திரு. அரங்கசாமிப் பிள்ளையவர்களும், சமாஜச் சார்பில் பொதுக்காரியதரிசியும் யாவருக்கும் நன்றி கூறினார்கள். சிவநாம முழக்கத்துடன் இரவு 9-மணிக்கு மாநாடு இனிது முடிந்தது.

மூன்று நாட்களிலும் திரு. கலியாணசுந்தர தேசிகரும், விருத்தாசலம் தேவார பாடசாலை மாணவ மாணவியரும்

இடையிடையே இன்னிசை விருந்தளித்தனர். வெளியூரிலிருந்து வந்த அனைவர்க்கும் "உண்டி நாலுவிதத்தில் ஆறு சுவைத் திறத்தினில்" உணவு அளித்து, தங்கும் வசதிகளையும் செய்து கொடுத்தது மிகவும் பாராட்டத்தக்கது. அதற்கு வரவேற்புக் கழகத்தினர்க்கு நன்றி உரித்தாகுக.

சமாஜ 51-ம் ஆண்டு அறிக்கை

(மலர் - 30 ; இதழ் - 1; 16-ம் பக்கத்தொடர்ச்சி)

28–5–56-ல் திருநாவலூர் செந்தமிழ்க் கழகத்தினர் சமாஜ மாதக்கூட்டத்தினை நடத்தித் தந்தார்கள்.

வரவு செலவுக் கணக்கு :—51-ம் ஆண்டு (1–12–55 முதல் 30–11–56 வரை) வரவு செலவுக் கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பேடு இறுதியில் தரப்பட்டுள்ளது.

சமயப் பற்றற்ற அரசுரிமை பெற்றிருக்கின்ற நம் நாடு மொழிவழி பிரிந்து அரசு இயங்கத் தொடங்கும் இந்நாளில், சைவர்களின் சமய வாழ்வு வளம்பட மடாலயங்களும், அறநிலையங்களும் துணைபுரிந்தாலும், பொது மக்களின் சார்புடையதாகிய இச் சமாஜம் தொடர்ந்து சிறந்த பணியாற்றி வரவேண்டுவது முன்னினும் இன்றியமையாக் கடமையாகிறது. இதனைச் சைவக் குடும்பத்தினர் தலையாய கடமையாக ஏற்றுச் சமாஜ ஆண்டுச் சந்தா ரூபா 3 செலுத்தி, 'சித்தாந்தம்' இதழை இலவசமாகப் பெற்றுச் சமாஜத் தொண்டினைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

நன்றி :—சமாஜத்திற்கு உதவிபுரிந்த உறுப்பினர், செயற்குழுவினர், சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பால சுப்பிரமணிய பக்தஜன சபையினர், சைவத் தேர்வுகளின் அதிகாரிகள், மேற்பார்வையாளர், 'சித்தாந்தம்' முதலியவற்றைச் செம்மையாக அச்சிட்ட 'சாது' அச்சகத்தினர், வெளியூரில் சமாஜச் சமயக் கூட்டங்களை நடத்தித் தந்த அன்பர்கள், சொற்பொழிவாளர்கள், சமாஜ அன்பர்கள் யாவர்க்கும் சமாஜம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

இப்படிக்கு

தி. கி. நாராயணசாமி நாயடு,

பொதுக் காரியதரிசி.

சமாஜ 51-ம் ஆண்டின் வரவு செலவுக் கணக்கு

(1–12–1955 முதல் 30–11–1956 வரை)

வரவு	ரூ.	அ.	பை.	செலவு	ரூ.	அ.	பை.
சாதாரண சந்தா	1330	0	0	சித்தாந்தம் காகிதம், அச்சுக்கூலி, ராப்பர், அறிக்கைகள்	1169	15	0
ஆயுள் சந்தா	101	0	0	பேறு புத்தகம்	1	12	0
நன்கொடை	500	0	0	தபால் வகை	139	0	9
தேர்வுக் கட்டணம்	3	0	0	போக்குவரவு, பிரயாணச் செலவு	6	15	0
புத்தக விற்பனை	130	7	6	சித்தாந்தம் எடு கூலி, ஒட்டுதல்	7	4	0
தபால் வகை (வி. பி. வரவு)	76	2	0	பலவகைச் செலவு	156	13	6
பலவகை வரவு	423	2	0	இந்தியன் பாங்கி (deposits)	1722	3	0
பாங்கி வட்டி	29	1	0	பாங்கி கமிஷன்	1	0	0
இந்தியன்பாங்கி(Withdrawals)	595	1	0	பொருளாளர் ரொக்கக்கையிருப்பு	26	12	[illegible]
ஆரம்பக் கையிருப்பு	43	14	6				
மொத்தம்	3231	12	0	மொத்தம்	3231	12	0

சமாசப் பொருள் வலிவு : இந்தியன் பாங்கி கணக்கில் இருப்பு ரூ. 2187—5—11.

சி. திருநாவுக்கரசு	தி. கி. நாராயணசாமி நாயுடு	ம. சி. நித்தியானந்தம்	ச. நடராஜ முதலியார்
ஆண்டுக் கணக்குப் பரிசோதகர்.	*காரியதரிசி.*	*பொருளாளர்.*	*மாதக் கணித பரிசோதகர்.*

வரவு	ரூ.	அ.	பை.	செலவு	ரூ.	அ.	பை.
புத்தகம் விற்று வரவு	383	5	3	காகிதம் வாங்கியது	165	14	3
தி. கி. நா. வரவு	0	4	9	ம. பா. மணிவிழாச் செலவு	79	8	6
				தபால் வகை	83	11	3
				புத்தகங்கள் மாற்ற வண்டிக்கூலி	30	0	0
				சித்தாந்த முகவரி அச்சுக்கூலி	24	8	0
மொத்தம்	383	10	0	மொத்தம்	383	10	0

சமாஜ் 51-ம் ஆண்டு விழாவின்

சைவ மங்கையர் மாநாட்டுத் தலைமையுரை

ச. கற்பகவள்ளி அம்மையார், (B. Sc. Hons.)

உலகெலாம் உணர்ந்து "ஓதற்கு அரிய பெரியவனது திருவருள் நிரம்பப்பெற்று," புண்ணியம் திரண்டுள்ளது போன்று குழுமியிருக்கும் இப்புனிதர் பேரவையிலே, பூசுவாரைக்கண்டு பூசும் அவ்வளவே திருநீற்று நெறியைத் தெரிந்து வைத்த என்னை, தலைமை என்ற பெரிய மகுடத்தோடு நிறுத்தி வைத்திருக்கிறார்கள். பொன்னுண்டாகிய ஐம்பது நிறைந்து, அடுத்த ஆண்டின் நிறைவு விழா நிகழ்கிறது இப்போது. இவ்விழாவுக்குரிய அழைப்பிலே குறித்துள்ளபடி, நமது நாடு மொழிவழி அமையப் பெற்ற பின்னர் நிகழும் முதல் மாநாடு இது. கூடும் இடம் மெய்கண்டார் தோன்றி யருளிய திருப்பதி. இவை போன்ற சிறப்புக்கள் அமையப்பெற்ற இவ் ஆண்டுத் திருக்கூட்டத்திலே சிறப்பான பங்குபெறக் கொடுத்து வைத்தமை பற்றிச் சற்றுப் பெருமைதான் ஏற்படுகிறது. ஆயினும் என் அறிவாற்றலின் சிறுமையையும் என் ஆண்டு அநுபவங்களின் குறைவையும் நோக்க, ஏற்றுக்கொண்ட பொறுப்பு சாலவும் பெரிதே. ஆயினும் முழுப் பொறுப்பு என்னதல்லவே! என் இளமைக்குரிய மதிக் குறைவாலும், துணிவாலும், "உறுவினை காய்வோன் உயர்வு வேண்டல் பொய்" என்ற ஒரு நியாயம் பற்றி ஏற்றுக் கொண்டேன் எனினும், ஏற்பித்த பெரியவர்களே பொறுப்பேற்பர்—என்னால் ஏதேனும் குறைபாடுகள் ஏற்பட்டால்.

இங்கே சொன்னது ஏதோ முறைக்காகச் சொல்ல வந்த வெற்று அவையடக்கம் அல்ல. தலைமை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று நமது அமைச்சரவர்களது கட்டளையைக் கண்டவுடனேயே, என் தகுதியின்மைக்குரிய காரணங்களில் ஒன்றாக முதலில் பட்டது எனக்குத் தீக்கை இல்லாமை. இதை என் தந்தையாரவர்களிடம் சொன்னேன். அவர்கள் வயிறு குலுங்கச் சிரித்துவிட்டார்கள். "உன்னை அழைத்து எழுதியிருக்கும் அன்பரே தீக்கை

பெற்றுக்கொண்டவர் அல்லவே! நமது சமாசப் பொதுக் காரியதரிசியாகப் பல ஆண்டுகள் தொண்டாற்றிய பேரன் பரும் அப்படித்தானே !'' என்று விளக்கம் சொன்னார்கள். தீக்கை இல்லாமலே அப்பேரன்பர் இருவரும் சைவத்துக் குச் செய்துள்ள பெருந் தொண்டுகளை எடுத்துக் காட்டி னார்கள். வளர்ப்பானேன். அப்பாவும் ஒப்புக்கொள்ளவே சொன்னார்கள். தன் குஞ்சு அல்லவா? பொன் குஞ்சு தானே! அவையத்து முந்தியிருப்ப நண்பர் செய்ய முன் வந்தபோது "உறுவினை காய்வோன் உயர்வு வேண்டல் பொய்" என்று அமைக, அருள் அனைத்தும் ஆட்டும் என்று முடித்துவிட்டார்கள். சந்நிதியிலே நிற்கிறேன்—திருவருளை யும், பெரியார் பொறுமை யருளையும் எதிர்நோக்கி.

தீக்கை பற்றிய நினைவு எனக்கு நேர்ந்தது இந்தத் தூங்கானை மாடத்துத் தொடர்பு பற்றி. தூங்கானை மாடத் துச் சுடர்க் கொழுந்தின் அடிபரவி, "பொன்னார் திரு வடிக்கு" என்றெடுத்து, "நின் இலச்சினை இட்டருள்'' என்று கேட்டு, நம் அப்பர் தம் அப்பனது "மூவிலைச்சூலம் சினவிடையுடன் சாத்த''ப் பெற்ற செழும்பதியல்லவா இது?

மேலே வந்த பகுதியை எழுதும்போது "அப்பர்" என்றும் "அப்பன்" என்றும், சொல்ல நேர்ந்ததல்லவா? இவ்விரு சொற்களின் மீதும் எண்ணம் ஓடுகிறது. இரண்டு சொற்கள் என்பது தவறு; அவையிரண்டும் ஒரே சொல் லின் இரண்டு உருவங்கள் என்பதே சரி. சைவத் திருநெறி யிலே "அப்பன்" ஒருவனே, "அப்பரும்" ஒருவரே; "அம்மை" ஒருத்தியே, "அம்மையாரும்" ஒருவரே. "அவனை" "அவர்" பாடியது என்று சங்க நூல்களில் வரும் "அவன்" என்று ஈத்துவக்கும் மன்னனைக் குறித்தும், "அவர்" என்று ஏற்றுக்கொள்ளும் ஏழைப் புலவரைக் குறித்தும். இதுதான் தமிழனது காலங்கண்ட மரியாதை போலும். ஆண்டவனை அவன் என்றும் அப்பன் என்றும் உரிமை கொண்டாடி ஒருமையினால் குறிக்கும் தமிழன், அடிய வரை அவர் என்றும் அப்பர் என்றும் கண்ணிய உணர் வினால் பன்மையுருப்பெய்து பயனிலை அடைகிறான். கண்ணி நுண் சிறுத்தாம்பினால் கட்டுண்டு அடிபட்ட கண்ணனையும் புறக்கணித்து, ஆழ்வார் திருவடிகளிலே தலைசாய்த்து ஈடு

படும் மதுரகவிகளின் நினைவு இங்கு எழுகிறது. வைணவத்தில் மட்டுமா இவ்வகை ஈடுபாடு? அப்பூதியடிகளின் ஈடுபாடு அப்பர் திருவடிகளுக்கு அன்றோ!

தேவாரத்து அடங்கன் முறை அவ்வளவையும் கடைந்தெடுத்து இவையே திரண்ட பொருள் என்று அகத்திய முனிவர் காட்டியருளியதாக வழங்கும் எண் பொருள்களில், எட்டாவது பயனிலைப் பொருளாக மிளிர்வது தொண்டுதானே! பன்னிரண்டாம் சூத்திரம் பயின்ற பொருள்களில் சிறந்தது தொண்டர்தம் சேவையே என்றல் பழுதில்லையே? நம் சமயத்துக்கே உரிய பெருவைப்பு எனத்தகும் பன்னிரண்டாம் திருமுறையின் உண்மைப் பெயர் "திருத்தொண்டர் புராணம்" தானே! இத் திருமுறை தானும் விரியாக அமைய, கருவாகத் தோன்றிய திருத்தொண்டத் தொகையினைத் தருவதற்காகவே யன்றோ, நம்மை ஆளுடைய நம்பிகள், மாதர்மேல் மனம் வைத்தது. தொண்டே சமயத்தின் உயிர்நிலை. தொண்டர்தம் வாழ்க்கை வரலாறுகளே சமய நெறியில் நம்மைச் செலுத்துவன, செலுத்தி நிறுத்துவன, நிறுத்தி வாழ்விப்பன, வாழ்ச்சி தந்து உய்விப்பன, உய்தி பெறுவித்து மாறா மகிழ்ச்சியில் மலர்விப்பன.

அம்மையும் அப்பனும் இல்லாத, ஆனால் அம்மையப்பனாகிய, நம் கடவுள் " இவன் நம்மைப் பேணும் அம்மை காண் " என்று தன்னிற் பிரியாதமைந்த அம்மைக்குக் குறிப்பிட்டுக் காட்டியருளியதோடு, " அம்மையே " என்று அழைக்கவும் அழைத்தானே—காரைக்கால் பேயாரை! அப்புனிதவதியாரின் வழிவந்தவர்கள் நாம் என்று எண்ணும்போது இந்த மனிதப் பிறவியும் வேண்டுவதே என்ற உவகை பொங்குகிறதல்லவா!

இப்புனித நினைவலை " எங்கள் தெய்வம் " என்று தொண்டர் சீர்பரவவல்லார் தம் திருவாய் பொலியப் பாராட்டிப் பரவியுள்ள மங்கையர்க்கரசியாரின் நினைவை எழுப்புகிறது. வானவர் திருக்குலத்துக்கு ஒரு கொழுந்து; பாண்டி மாதேவி; பாண்டியன் ஒருவனுக்கேயல்ல, தென்னர் குலத்துக்கே வந்த பழிதீர்த்த தெய்வப்பாவை; மன்னனுக்கு உண்மையான வாழ்க்கைத் துணையானதோடு, மன்னுலகையும் வாழ்வித்த வழித்துணை. அன்று மட்டுமல்ல,

அவனுக்கு மட்டுமல்ல, அந்நாட்டுக்கு மட்டுமல்ல—என்றும் எந்நாட்டுக்கும், யாவர்க்கும், தனி அரசி, நங்கள் தெய்வம்.

அம்மையார், அரசியார் என்ற இவர்களோடு, நம்பிகளை நமக்கு அளித்தருளிய திருத்தாயார்—இம்மூவரும் திருத்தொண்டத் தொகையில் சிறப்புறப் பெயர் பெற்றது போலத், திருத்தொண்டர் புராணத்திலும் தனிப் புராணம் பெற்றுள்ளனர். ஆனால் இவர்களோடு நமது அப்பருக்கு வாழ்வளித்த தமக்கையாரை மறக்க முடியுமா? அப்பூதியடிகள், சிறுத்தொண்டர், இயற்பகையார், இளையான்குடியார், திருநீலகண்டத்தார் முதலிய நாயன்மார்களின் நாயகிமணிகளை மறக்க ஒண்ணுமா? பெரிய புராணம் போற்றும் பெரியவர்களின் பெருமையில் எல்லாம், பெண்மை உரிய இடம் பெற்று மிளிர்கிறது. இந்த உண்மையை உன்னி, உணர, உணர, நம் பெண் மக்கள் வாழும் வகை அறிவர். தாமும் வாழ்ந்து, தம்மவரையும் வாழ்ச்சி பெறுவிப்பர். "வாழ்வரசி" என்று பெண்பாற் பெயர் ஒன்று இருப்பதுபோல, "வாழ்வரசன்" என்று ஆண்பாற் பெயர் இருப்பதாகத் தெரியவில்லை.

இப்படிச் சொல்வதனால் ஆண்களைக் குறைத்தபடி அன்று. ஆண் என்ற சொல்லு ஆள் என்ற பகுதியின்அடியாக வந்தது என்று கேட்டிருக்கிறேன். நம்மை யெல்லாம் ஆள்கின்றவர்கள்; ஆளமுடியாவிட்டாலும், ஆளமுயல்பவர்கள். பெண்களை மட்டுமல்ல, நம்மிற் பிற ஆண்களையுமே ஆண்டு அடக்க முனைபவர் ஆண்கள். இவ் ஆட்சி முயற்சியும், முனைப்பும், சிறப்பாக அறிவினின்றும் எழுவது. அறிவானது அறிந்த அளவிலேயே, அது சிறிதளவேயானாலும், அவ் அளவுக்குரிய ஆற்றலாக வெளிப்பட்டுவிடும். இது அறிவின் இயற்கை. ஆணியல்பு பெரும்பாலும் இப்படியே. ஆணில் பெண் உண்டு, பெண்ணில் ஆணும் இருப்பது போல. பெரும்பான்மை பற்றிச் சொல்வது இங்கே. ஆண் அடக்கும் என்றால், பெண் அடங்கும் என்பதல்ல. பெண் என்ற சொல்லும் பெட்பு என்ற சொல்லும் உறவுடையன. பெட்பு என்பது அன்பு. அன்பு அடங்குமா? அடங்குவது போல இருக்கும். ஆனால் உண்மையில் ஆள்வது, மேல் ஓங்குவது அதுவே. அன்புக்கும் உண்டோ அடைக்கும்

தாழ்? அன்பை அடக்கும், அடைக்கும், தாழ்ப்பாள் இல்லவே இல்லை.

ஓர் எடுத்துக் காட்டினால் விளக்க விரும்புகிறேன். "மருள் நீக்கியார்" என்பது பெயரளவில் மட்டுமன்று. மனத்திலே முகிழ்த்தெழும் சுருள்களை எல்லாம் நீக்கி, அம் மனமாகிய மலரை மலர்விக்கும் கலைகளை எல்லாம் பயின்றவர். செழுங்கலையின் திறங்களெல்லாம் முறைமையில் பயின்று அறிவு முதிர்ந்தவர். அவ் அறிவும் அனுபவத்துக்கு வாராமல் மூளையளவிலே முடங்கிக் கிடந்த அறிவல்ல. நிலையாமை கண்டு அறங்கள் செய்வாராய், காவளர்த்தும், குளம் தொட்டும், கடப்பாடு வழுவாமல் மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும், விருந்தளித்தும், நாவலர்க்கு வளம் பெருக நல்கியும், நானிலத்துள்ளோர் யாவருக்கும் தவிராத ஈகை வினைத்துறை நின்றார். பெற்றோர் பிரிந்தமை, ஆக்கையாரை மகட் பேசிய கலிப்பகையார் தீர்ந்தமை, அவ் அக்கையார் கைம்மை நோன்பு முதலியன கண்டு நிலையாமை யுணர்வே மீதூர, மனம் மறுகி மதமாற்றங் கொண்டார். அதுவும் அறிவுக் குறைவால் அன்று: "நம்பர் அருளாமையினால்" என்பதுதான் சேக்கிழார் தருகின்ற விளக்கம். போன இடத்தும் அறிவு வளரா கிடக்கவில்லை. மேலும் வளர்ந்தது. அமண் சமயத்து அருங்கலை நூலான எல்லாம் பொங்கும் உணர்வுறப் பயின்றே அந் நெறியில் புலன் சிறந்தார். அவ் அறிவுச் சிறப்பினாலேயே அங்குத் தருமசேனர் என்ற பெயரும் பெற்றார். பிறரை வாதின்கண் வென்று ஒளியுடைய வித்தகராய் அமண் சமயத் தலைமையினில் மேம்பட்டார். ஆயினும், அவ் அறிவெல்லாம் என்ன ஆயிற்று? தம்பியார் உளராகவேண்டும் என்று தமக்கையார் வைத்த தயவும், அப் பெருந்தகையார் "அடியேன் பின் வந்தவனை எடுத்தாளவேண்டும், அவமொன்று நெறி வீழ்வான் வீழாமே அருளும்" என்று செய்துகொண்ட விண்ணப்பமும், மருள் நீக்கியாரை அப்பராக்கியது. அறிவு பேர் தந்தது, புகழ் தந்தது; ஆனால் நெறியினின்றும் பிறழ்த்தியது. அன்பு அடங்கியிருந்தது; பிறரறியாவண்ணம் ஒடுங்கிக் கிடந்தது: ஆனால் தன்னையும் காத்து, தன்னவரையும் காத்தது: ஏன், உலகத்தையே வாழ்வித்தது.

இன்னொரு வரலாற்றையும் எடுத்துக்காட்டும் நினைவு எழுகிறது. செய்வகை இடையே தப்பிய தென்னவனும், அவனையும் அவனோடு நாடு முழுவதையுமே, திருத்தியாட் கொண்ட நங்கள் தெய்வத் திருமானியாரும் நினைவில் வரு கிறார்கள். அரசன் அறிவில் குறைந்தவனல்ல. அறிவோடு ஆற்றலும் ஆற்றப் படைத்தவன். அரசியலாணைச் செருக் கும் சேர்ந்தது. ஆசியாரோ பெண்மையே உருவான தொரு திருமேனி. அவரது அன்பின் நீர்மையே, அவ் அன்பி னின்றும் உருவாகிய தொண்டின் சீர்மையே, மீனவற்கு உயிரை நல்கியது; மெய்ந்நெறி காட்டி உய்யக்கொண்டது, திருநெறியை வாழ்வித்தது. அன்பு தோல்வியே அறியாதது. அன்பு அடங்கித் தோன்றினும் உண்மை வெற்றி அதற்கே. அறிவு தன் ஏலாமையை அறியாமல் ஆரவாரம் செய்யும்; ஆனால் அன்பின் ஆட்சியில் ஒடுங்கியேவிடும். ஆண் தன்மை அறிவுபோல. பெண் தன்மை அன்பு போல. ஆண் ஆள முனையும, ஆள்வதுபோலத் தோன்றும்: பெண் தாழ்ந்தே போகும்; உண்மையில் ஆள்வது அதுவே.

ஆணைக் குறைத்தோ பெண்ணை ஏற்றியோ பேசியது இல்லை. மேலெல்லாம் ஆண் அறிவு என்றால், பெண் அன்பு. ஆணும் பெண்ணும் இல்லாமல் வாழ்வு இல்லை; அப்படியே அறிவும் அன்பும் இல்லாமல் வாழ்க்கையே இல்லை. அறிவு கையோங்க வேண்டிய இடங்களுண்டு; அப்படியே அன்பு ஆட்கொள்ள வேண்டிய இடங்களும் உண்டு. மூளை இன்றி யமையாததே; ஆனால் மூளையால் மட்டும் முழு வாழ்வு அமைந்துவிடாது. நெஞ்சம் இல்லாமல் வாழ்வே இல்லை.

ஆணும் பெண்ணும் இணைந்து செல்வதே பொதுவாக வாழ்க்கை நிலை என்பதுபோல, அறிவும் அன்பும் இணைந்து சென்றால்தான் வாழ்க்கையால் எய்தும் பயன்களை எல்லாம் எளிதில் எய்தலாகும். ஆயினும் சமய வாழ்வு என்ற துறை யிலே அன்புக்கே ஆதிக்கம். இந்த ஓர் உண்மையை ஒரோ வழி உணர்விக்கவே என் தலைமை யுரையில் முயல்கிறேன்.

"ஏதுக்களாலும், எடுத்த மொழியாலும் மிக்கு, (மிக்கு)ச் சோதிக்க வேண்டா" என்ற திருப்பாசுரக் கட்டளையை ஓரவேண்டும், உன்னவேண்டும். இதற்குச்சேக் கிழார் தரும் உரையையும் உளங்கொள வேண்டும். "ஏது எடுத்துக்காட்டு அன்னவற்றால் அளப்பிலன் என்பதாம்"

என்கிறார். அதாவது தர்க்க வாதங்களால் அகப்படான் என்பது. "He is beyond formal proof and mere Logic. I feel it, but I cannot prove it: "நான் உணர்கிறேன், ஆனால் மெய்ப்பிக்க முடியாது" என்கிறார் காந்தியண்ணலும். ஆனால் "சுடர்விட்டுளன் எங்கள் சோதி" என்ற பகுதிதான் உயிர்ப்பகுதி; உயிருக்கு உறுதி தரும் பகுதி. "சுடர்விட்டுளன் என்பது அன்பில் ஊன்ற, உள் எழும் சோதியாய் நின்றவன், என்று காண்பார்க்கு இது பொருள் என்றதாம்" என்று உரை விரிக்கிறார் சேக்கிழார். அறிவுக்கு எட்டாத அப்பரம் பொருள் அன்புக்கு அகப்பட்டு, "இது" என்று சுட்டியே காட்டிவிடும் நிலைமைக்கு வந்து விடுகிறது.

இங்கே எங்கள் பரம்பரை முதல்வர் காட்டியருளிய வள்ளலார் கைவண்ணம் நினைவுக்கு வருகிறது. இந்தச் சைவத் திருக்கூட்டத்திலே வரலாற்றை நீட்டிக் கொண்டிருக்கமாட்டேன். கண் மலர்கள் நீர் ததும்ப, கைம்மலர்களால் பிசைந்து, வண்ணமலர்ச் செங்கனிவாய் மணி அதரம் புடைதுடிப்ப, புண்ணியக் கன்றனையவர்தாம் பொருமி அழுதருளினார். அழுதழைத்துக்கொண்ட அந்தச் சிறிய பெருந்தகையாரது திருவுருவத்தைச் சேக்கிழார் இப்படி எழுதுகிறார் நமது உள்ளக்கிழியிலே. "யாரளித்த பாலடிசில் உண்டது நீ?" என வெகுண்டு, "எச்சில் மயங்கிட உனக்கு ஈது இட்டாரைக் காட்டு என்று, கை-காணாது என்றோ, அவ் எச்சில் உண்ட பிள்ளையைத் தீண்டலாகாது என்றுதானோ (சேக்கிழார் இதுஅது என்று சொல்லவில்லை). "ஒரு மாறு கொண்டு" ஓச்சினார் தகப்பனார். அப்போது "ஆனந்தக்கண் துளிபெய்து, உச்சியினில் எடுத்தருளும் ஒரு திருக்கை விரல் சுட்டி".........என்று மேலே நிகழ்ந்த பெருநிகழ்ச்சியைப் பேசிப் போகிறார் சேக்கிழார்.

அச்சிறிய பெருந்தகையார் ஆனந்தக்கண் துளிபெய்து உச்சியினில் எடுத்தருளும் ஒரு திருக்கையின் அந்த ஒரு விரலிலே ஈடுபடுகிறார் எங்கள் முதல்வர். பாங்குள நாம் தெரிதும் எனத் துணிந்து, நான்கு அல்ல, கோடிப் பழமறைகள் ஈங்கு உளது என்று, ஆங்கு உளது என்று, ஓடி ஓடி, இளைத்து இளைத்து, தொடர்ந்து தொடர்ந்து, எட்டும் தோறும் வாங்குபரவெளி முழுதும் நீண்டு நீண்டு, மறைந்து

மறைந்து, ஆனால் ஓரோவழி ஒளிர்ந்துகொண்டே தோன்றும் அரும் பெரும் சோதி; மொழிக்கு அப்பால்பட்டு ஒளிரும் பொருள்; சிந்தையும் செல்லாச் சேண்மைத்து.; "அவாங் மன கோசரன்" வேதங்கள் ஐயா என, ஓங்கி ஆழ்ந்து அகன்ற, நுண்ணியன்; நேதி நேதி, இஃது இல்லை, இஃது இல்லை என்று ஓதுக்குமே ஒழிய வேதமானது "இது பொருள்" என்று சொல்லவில்லை. வேதம் அறிவு தானே—அறிவுக்கு எல்லாம் •அப்பாற்பட்டவன் அவன். வேதம் கண்டதில்லை, கண்டதாகச் சொல்லவுமில்லை.

வேதத்தின் முயற்சி அதுவாக, ஆகமம் ஒன்று செய்தது. எங்குமுள்ள பொருள்தானே, எங்கும் காணலாமே என்று முயன்றது. வாய்ப்பான இடம் ஒன்றைத் தேர்ந்து, தூய்மை செய்தது. நீராலும், மந்திரத்தாலும் மேலும் தூயதாக்கியது. இயந்திரம் அமைத்தது. அதற்கு வேறுபல மந்திரம், கிரியை முதலியவற்றால் ஆற்றல் ஊட்டிற்று. பீடம், கருவறை, பெருமண்டபம், திருச்சுற்று முதலியன அமைத்துக் கோயில் எடுத்தது. பூசையோடு சிறப்புக்களும் ஏற்படுத்தியது. எல்லாம் ஆண்டவனைக் கண்டுவிடத்தான்; எங்குமுள்ள பரம்பொருளை இங்கே கண்டுவிட.

பவுரி என்பது ஒரு கூத்து. வலம் இடமாகச் சூழ்ந்தாடும் கூத்து என்பது உரைக் குறிப்பு. வேதாகமங்கள் ஒன்றோடொன்று ஒவ்வாது கூறும் பல பேத சமய நெறிகளைக் கூத்தாக்கினார் என்று காட்டுகிறார் உரையாசிரியர். வேதங்கள் ஒரு பக்கமும், ஆகமங்கள் ஒரு பக்கமும் ஆக, வலம் இடமாகச் சூழ்ந்து சூழ்ந்து ஆடுகின்றன, கூத்தாடிக் கொண்டு இருக்கின்றன. கூத்தர் தலைவன் வருகின்றான். வந்தவன் தன் கைப்பிரம்பினை ஓச்சுகின்றான். கூத்து ஓய்ந்துவிடுகிறது. இந்தக் காலத்து பாண்டு (Band) வாத்தியக் குழு ஒன்றை நினைவுக்குத் தந்து, அந்தக் குழு இசை துவங்க என்று ஒருவகையாயும், நிறுத்த என்று ஒரு வகையாயும், குழுவின் தலைவன் பிரம்பையோ தன் கையையோ ஓச்சும் நிலையை எண்ணிப்பாருங்கள். அந்த வண்ணம் நின்றுவிட்டது வேதாகமப் பவுரிக் கூத்து— எப்போது, எங்கே? எங்கள் பிள்ளையார்—ஆனந்தக் கண்துளி பெய்து, உச்சியினில் எடுத்தருளும் ஒரு திருக்கை

விரல் சுட்டி, விண் நிறைந்த பெருகொளியால் விளங்கும் மழவிடை மேலே பாவையுடன் எண்ணிறை கருணையினால் நின்றாரை எதிர்காட்டி யருளிய அப்போது, அங்கே தருக்கம் முதலிய தந்திரங்களுக்கு அப்பாற்பட்டுக் கடந்துள்ள கடவுளை, வேதாகமங்கள் காணமுடியாத மெய்ப்பொருளை, மூவரும் முப்பத்துமூவரும் காணாத நங்கள் பெருமானை, அடையாளங்களுடன் சாற்றித் தாதையார்க்கு "எம்மை இது செய்தபிரான் இவன் அன்றே" என்று கண்காணக் காட்டியே அருளினார் பிள்ளையார்.

ஒழிவிலொடுக்கத்து முதற்பாட்டின் முதல் கடைசி வரிகளின் திரண்ட பொருள் மேலே காட்டியது. அவ்வரிகள் "வேதாகமப் பவுரி வீசும் களாசநிலை......கருணை பொழிவா னெடுத்தகை" அருளானந்தத்தைப் பொழியா நின்ற, பிள்ளையார் உயர எடுத்துச் சுட்டோடு மெய்ப் பொருளைக் காட்டிய திருக்கரமானது, வேதாகமங்களினது பவுரிக் கூத்தினைப் பிரம்போடும் கைவாரங்கொண்டு வீசி நிறுத்தும் ஓர் உண்மைநிலை, என்பது பொழிப்பு.

"தோடுடைய செவியன், விடையேறி ஓர் தூவெண் மதிசூடி, பொடிபூசி..." என்ற வண்ணம் அங்க அடையாளங்களோடு பிள்ளையார் தாமும் கண்டு, பிறர்க்கும் காட்டியருளுபவர், "எனது உள்ளம் கவர் கள்வன்" என்றும், "பெம்மான் இவன் அன்றே" என்றும் எக்களிக்கிறார்.

இந்த ஒழிவிலொடுக்கத் திருப்பாட்டுக்கு உரை செய்ய வந்த திருப்போரூர் அடிகள், "தோடுடைய செவியன்" என்ற திருப்பாசுரத்தைத் "திருக்கடைக் காப்பு" என்று குறித்திருக்கிறார். "தோடுடைய செவியன்" என்ற தேவாரத்தைச் சொல்லி, "என்னும் திருக்கடைக் காப்பால்" என்றும், பின்னர் "இத்திருக்கடைக்காப்பு பிள்ளையார் ஞானபோனகம் உண்டருளியபோது அருளிச் செய்யப் பட்டது" என்றும் எழுதுகிறார். பிள்ளையாரது தேவாரப் பதிகங்களில் கடைசியனவாக நிகழும் திருப்பாசுரங்களையே "திருக்கடைக் காப்பு" என்பதுதானே வழக்கு? அப்படித் தானே சேக்கிழார் பெருமானும் வழங்கியிருக்கிறார்? தோடுடைய செவியனைப் பாடிய வரலாறு சொல்லி வரும் இடத்திலேயே "திருப்பதிகம் நிறைவித்துத் திருக்கடைக் காப்புச்

சாத்தி " என்று பேசுகிறார். செம்பொற்றுளங்கள் பிள்ளை யார் கைத்தலத்துற்ற செய்தி சொல்லும்போது, " தமிழ்ப் பதிகம் எய்தப் பாடி...தக்க திருக்கடைக்காப்புச் சாத்தி நின்றார் " என்கிறார். " காரைகள் கூகைமுல்லை " எனச்சீரியற் பதிகம் பாடித் திருக்கடைக் காப்புத்தன்னில் நாரியோர் பாகர் வைகும் நனி - பள்ளி உள்குவார் தம்பேரிடர் கெடுதற்கு ஆணை நமது எனும் பெருமை வைத்தார் " என்று பாடு கிறார். இவ்வாறே பிள்ளையார் புராண முழுவதிலும் " திருக் கடைக் காப்பு " என்று கடைசிப் பாசுரங்களையே குறிப் பிடுகிறார் சேக்கிழார். ஆக, " ஒழிவிலொடுக்கத்து உரையில் திருப்போரூர் அடிகள் " தோடுடைய செவியனேயே " திருக்கடைக் காப்பு என்பானேன் ?

தேவாரம் என்ற திருப்பெயர், நம்பிகள் பாசுரங் களுக்கே ஒருகால் வழங்கியது என்றும், பின்னரே மற்ற இரு பெரியார் பாசுரங்களுக்கும் அப்பெயர் வழங்க லாயிற்று என்றும், அப்பர் திருப்பாசுரங்கள் திருநெடுந் தாண்டகம் என்றும், பிள்ளையார் பாடல்கள் திருக்கடைக் காப்பு என்றுமே வழங்கிவந்தன என்றும் சொல்லக்கேட் டிருக்கிறேன். இங்கே இப்போது நான் நினைவுறுத்த நினைவது, திருக்கடைக்காப்பு என்றே பிள்ளையார் தேவாரம் வழங்கிவந்தது என்பதற்கு, தக்க இலக்கியச் சான்று உள்ளது என்பதே.

இதன் தொடர்பாக எங்கள் வீட்டில் வழங்குவ தொன்றைச் சொல்ல நினைக்கிறேன். எங்கள் வீடு என்ற போது, எங்கள் பரம்பரையையே உளங்கொண்டது. ஒழிவிலொடுக்கப் பரம்பரை என்றும், வள்ளலார் வழி என்றும் சொல்லிக்கொள்கிறோம். இங்கே வள்ளலார் என்றது காழிக்கண்ணுடைய வள்ளலை மட்டுமல்ல ; ஒழிவி லொடுக்கம் செய்த அவரும் சேக்கிழாரும், வள்ளல் என்று வழங்கி யிருக்கின்ற பிள்ளையாரை மட்டுமல்ல ; பிள்ளையார் என்ற பெயருக்கே முதல்வரான முருகனையே குறித்து நிற்கும் வளவிய வண்மொழி. இவை பற்றி யெல்லாம் இப்போது பேசாமல் (எனக்கு இந்த விவரங்களெல்லாம் தெளிவாய் முழுவதும் தெரியாது என்பதே உண்மை!), திருக்கடைக் காப்புக்கு வருகிறேன் ; அதாவது இதன் தொடர்பாக எங்கள் பரம்பரையில் வழங்குவதைச் சொல்ல.

அதைச் சொல்லுமுன் ஒரு விளக்கம் தரவேண்டும். என் தந்தையார்தான் இதை எனக்குச் சொன்னது. ஆனால் அவர்கள் இதை வெளியிட அஞ்சியிருக்கிறார்கள். அச்சம் என்ற ஒரு கீழ்மையை அவர்கள்பால் ஏற்றுவதற்கு அடியேன் அஞ்சுகிறேன். அவர்கள் திருவடிகள் அடியேன் தலைமேல. தந்தை பிள்ளை, அண்ணன் தம்பி, தமக்கை தங்கை, கணவன் மனைவி என்ற வகையாகச் சில கருத்துக் கள் எங்கள் பரம்பரையில் வந்திருக்கின்றன. தீக்கை முதலிய உபதேசக்கிரமங்களுடன் அவ்வப்போது பக்குவம் நோக்கித் தரப்படுவன இக்கருத்துக்கள். ஆறு எழுத்து மந்திரம், இப்போது வழங்கிவரும் எதுவும் அல்ல; திருமுரு காற்றுப்படையில் வருவன ஆறு தலங்களல்ல, அது செந்தில் ஒன்றுக்கே உரிய நூல்; திருமுருகாற்றுப்படை என்ற பாவினத்துக்கு இப்போது கூறிவரும் விளக்கமும் நாங்கள் சொல்லும் விளக்கமும் வேறு வேறு...என்பன போன்ற கருத்துக்கள். அநுமதியின்றியே சில கருத்துக்களை முன்னர் வேறிடங்களில் பேசிவிட்டேன். அப்பா கடிந்தார்களே னும் மன்னித்து விட்டார்கள். இப்போது அவர்கள் சம் மதம் பெற்றே பேசுகிறேன்.

எங்களிடையே வழங்கும் கருத்தை வெளியிடுவதாகக் கொள்ளவேண்டுமே ஒழிய, பிற கொள்கை எதையுமோ, பிறர் யாரையுமோ தவறு சொல்வதாகக் கொள்ளக்கூடாது. இப்படிப்பட்ட தப்புணர்ச்சிக்கு இடம் தருவானேன் என்பதுதான் என் தந்தையாரின் தயக்கம் எல்லாம். இளமை பயமறியாது என்பது என் கிலை. திரு. வி. க. இப்போது இல்லையே என்று ஏங்குகிறேன். கருத்து வேற்றுமைகளைப் பெரிதும் வரவேற்பதோடு, பாராட்டவும் செய்வார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன், அதுவும் ஓர் ஏழைப் பெண் சொல்லுவதென்றால்!

இவ்வளவு முன் எச்சரிக்கையுடன் சொல்ல வரும் கருத்து இதுதான். கடை என்று கதவு; காப்பு என்று அடைத்தல்; கடை காப்பு கதவடைத்தல். இது நிகழ்ந்தது வேதாரண்யத்திலே, மறைக்காட்டிலே கதவடைப்பை நிகழ்த்தியவர் பிள்ளையார். இந்தப் பெருநிகழ்ச்சி பற்றியே பிள்ளையார் பாடல்க ளெல்லாமே, கடைசிப் பாசுரங்கள் மட்டுமல்ல, திருக்கடைக் காப்பு என்னும் சிறப்புப் பெயர்

பெற்றன. இதுதான் எங்களிடை வழங்கும் கருத்தின் சுருக்கம்.

"முன்னாள் படியின் - மறை அருச்சித்துக் காப்புச் செய்த பைம்பொன் மணித் திருவாயிற் பாங்கு வந்தார்" என்றும், "அரு மறைகள் திருக்காப்புச் செய்து வைத்த அக்கதவம் திறந்திட அம்மறைகள் ஓதும் பெருகிய அன்புடை அடியார் அணைந்து நீக்கப் பெருமையினால், அன்று முதலாகப் பின்னை ஒருபுடை ஓர் வாயில் அமைத்தொழுகும் தன்மை உள்ளபடி கேட்டருளி" என்றும், சேக்கிழார் பேசுகிறார். இது பிள்ளையார் புராணத்தில் அப்பர் வரலாற்றிலே—"மறைகள் அர்ச்சனை செய்து உரவக்கதவம் திருக்காப்புச் செய்த அந்நாள் முதல் இந்நாள்வரையும் அடைத்தே நிற்கின்ற மணிநீள்வாயில் வணங்குவார்" என்றும், "தொல்லை வேதம் திருக்காப்புச் செய்த வாயில் தொடர்வகற்றவல்ல அன்பர் அணையாமை மருங்கோர் வாயில் வழி எய்தி" என்றும் வருகிறது.

இப்பகுதிகளால் திரண்ட பொருள் இதுவே : வேதம் பூசித்துக் கதவை அடைத்தது, அவ்வேதம் திரும்பாமையால் கதவு திறக்கவில்லை—என்பது.

மேல் நிகழ்ச்சி : "அப்பரே, வேதவனத்து ஐயர் தம்மை அபிமுகத்துத் திருவாயில் திறந்துபுக்கே, எப்பரிசும் நாம் இறைஞ்சவேண்டும் ; நீரே இவ்வாயில் திருக்காப்பு நீங்குமாறு மெய்ப்பொருள் வண்தமிழ் பாடி அருளும்" என்று வேண்டிக்கொள்கிறார் பிள்ளையார். "என்னை இப்பரிசு நீர் அருளிச் செய்தீராகில் இது செய்வேன்" எனப் பதிகம் எடுத்துப் பாடுகிறார் தமிழ்மொழி வேந்தர். இது பிள்ளையார் புராணம் சொல்லுகிறபடி. இந்தப் பகுதியை அப்பர் வரலாறு இவ்வாறு பேசுகிறது. "ஓங்கு வேதம் அர்ச்சனை செய் உம்பர் பிரானை உள்புக்குத் தேங்காது இருவோம் நேர் இறைஞ்சத் திருமுன் கதவம் திருக்காப்பு நீக்கப்பாடும், அப்பர் ! என, நீடுந் திருநாவுக்கரசர், உள் நீர்மையினால் பிள்ளையார் உரை செய்தருள அதனாலே, "பண்ணினேர் மொழியாள்" என்றெடுத்துப் பாடினார். திருக்காப்பு நீங்கத் தாழ்த்தது. தாழ்ச்சிக்குக் காரணம் ஏதும் சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை பிள்ளையார் வரலாற்றிலே. ஆனால் அப்பர் வரலாறு, காரணத்தை—"பயன்

துய்ப்பான் திருக்காப்பு நீக்கத் தாழ்க்க" என்று காட்டு கிறது. திருநாவுக்கரசின் சொல்லிலும் பொருளிலும் இசையிலும் இவையெல்லாம் காட்டிய பரிவிலும் ஈடுபட்டுப் பெருமான் பாட்டின் பயனைத் துய்த்துக் கொண்டிருந்து விட்டான்! கடைசியாக "இரக்க மொன்றில்லீர்" என்று இறைஞ்சிப் பாடவும், கதவு திறந்தது.

அப்பரும், பிள்ளையாரும், உடனிருந்த அடியவரும் பதியவரும் ஆண்டவனை வணங்கினர், மீண்டனர். அப்போது அப்பர் பிள்ளையாரை நோக்கி "நிறங்கிளர் மணிக்கபாடம் நீக்கமும் அடைப்பும் நிற்கத் திறந்தவாறு அடைக்கப் பாடியருளும் நீர்" என்றார். "அருமறைப் பிள்ளையாரும் இன் தமிழ்ப் பதிகப் பாடல் இசைத்திட இரண்டுபாலும் நின்ற அக்கதவு காப்பு நிரம்பிட அடைத்தது". பிள்ளையார் வரலாறு இப்படிச் சொல்லும் இப்பகுதியை, அப்பர் வரலாறும்—"திறந்த கதவும் அடைக்கும் வகை நீரும் பாடியருளும்" என அப்பர் வேண்ட, பிள்ளையாரும் "பதிகம் பாடும் அவ்வளவில் கதவம் திருக்காப்புச் செய்தது எடுத்த திருப்பாட்டில்" என்று பேசுகிறது.

பின்னல் சொன்ன திருத்தொண்டர் புராணப் பகுதிகளால் திரண்ட பொருள் இதுவே: பூட்டிப் போன வேதம் திரும்பாமையால் அடைத்துக்கிடந்த கதவு, அப்பர் தமிழ்ப் பாட்டுக்குத் திறந்தது; அருமறைப் பிள்ளையார் பழையபடி மூடவும் செய்தார், இதற்கும் உதவியது தமிழ்ப் பாட்டே. வேதத்துக்கு உரிமையற்றவர் என்று சிலர் குறை சொல்லுதற்குரிய நம் அப்பர் தமிழ் பாடித் திறப்பித்தார்.

இவ் வரலாற்றிலிருந்து, தேவாரம் வேத சாம்யம் என்று முடிப்பர் சிலர். வேதம் எங்களுக்குத் தெரியாது; தெரிந்துகொள்ளவும் உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது; ஆனல் வேதம் பூட்டிய பூட்டுத் தேவாரத்தால் திறக்கப் பட்டுவிட்டது; அந்தத் தெய்வத் தமிழ் எமக்குப் போதியது என்பது எங்கள் கொள்கை; நம்பிக்கை.

வேதங்கள் என்று சில, ஒரு காலத்தில் நடையாடின. அவையெல்லாம் நாளேற நாளேறக் காடுபட்டபடி பெருகி விட்டன. இப் பெருக்கத்தாலே உண்மைப் பொருள்கள் புதைந்து போயின. இப்புதை பொருள்களைக் கண்டு கொள்ள மிகவும் அரும்பாடு படவேண்டி வந்தது. காடு

வெட்டிக் கான் பொருள் கொள்வதுபோல இந்த அரும் பாடு காணுதேன்று, வேண்டாத பொருள்கள் பலவும், பர தார கமனம், புலாலுணவு போன்ற வெறுப்புக்குரிய பகுதி களும், வேதங்களில் சேர்ந்துவிட்டன. ஆக, அவைகளைப் படிக்கலாகாது, கேட்கலாகாது, என்ற விலக்குகள் வந்தன. விலக்கப் படாதார்க்கும் பொருள்கள் துலங்கவில்லை. "திருவாய்மொழி செப்பலுற்றால்.....மாமறையுள் அயிர்த் தார் அயிர்த்த பொருள் வெளியாம் எங்கள் அந்தணர்க்கே" என்பது கம்பரது கட்டுரை. பொய்கை முனி பூதத்தார் பேயாழ்வார்......என்றிவர்கள் மகிழ்ந்து பாடும் செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றேமே" என்று வடகலையாசிரியர் வேதாந்த தேசி கர் சுருங்கச் சொன்னார்; நாங்கள் படிக்க, பாட, உரிமை யில்லாத, கட்டுமீறிப் படித்தாலும் பயன் தாராத, வேதங் கள் வேண்டாம்; அவற்றுக்கு ஒத்த திறனுடைய, அவற் றினும் பார்க்க மேலான பொருளை எளிதில் நல்கவல்ல தமிழ்த் திருமுறைகள் போதும். வேதம் காணமுடிய வில்லையே என்று ஏங்கிற்று: இதோ என்று கைதூக்கிச் சுட்டிக் காட்டிற்று தமிழ். பிள்ளையார் தேவாரம் திருக் கடைக் காப்பு: அது காப்பிட்ட கதவு காப்பு நெகிழவேண் டியதில்லை. தமது வல்லன்மையால் திருவருள் பாலித்த தேவாரப்-பாடல்கள் போதும் எல்லாப் பயனையும் பெற்றுக் கொள்ள.

"காதலியோடு பேசக் காதலன் வக்கீலுக்கு வக்கா லத்துக் கொடுத்த கணக்குத்தான், தன் தாய்மொழியல்லாத வேற்றுமொழியில் பாட்டை அனுபவிப்பேன் என்பது" என்று தாகூர் சொல்லியிருப்பதாகக் கேட்டிருக்கிறேன். பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் தன் காவிலும் சுற்றிச் சூழவும் பழகி வளர்ந்த நமது பைந் தமிழ் வாயிலாக அன்றி, வேற்று மொழி வாயிலாக என்ன பயன் பெற்று விட முடியும்? இசைக்கு மொழி வேண்டாம் என்கிறார்கள்: சரியாக இருக்கலாம் செவியின்பத்தைப் பொறுத்தமட்டில். பொருளுணர்வு இல்லாவிட்டால், ஓசையின்பத்தைவிட வேறு பயன் என்ன பெறலாகும்? பயனுடைக் கலையே என்று ஈடுபடுகிறார் மணிவாசகர். கலையும் பயன் உடைய தாகவே இருக்கவேண்டும். பேச்சு, எழுத்து, அல்லது

மொழி எங்கெல்லாம் வேண்டுமோ அங்கெல்லாம் தாய் மொழியே முயற்சிக்குத் தக்க பயனைத் தரும்; வேற்று மொழி உதவாது.

வேற்று மொழியால், பயன் குறைவு என்பதோடு மட்டுமின்றி, கேடும் விளையலாகும். இதை விரித்துப் பேச வேண்டியதில்லை.

நமது கோயில்களால் உண்மையான பயன் பெற வேண்டுமானால் தமிழில் பூசனை எல்லாம் நிகழவேண்டும். அர்ச்சனை மட்டுமல்ல, எல்லா நிகழ்ச்சிகளுமே தமிழில் நிகழவேண்டும். அர்ச்சனை தமிழில் இல்லையே என்று பேசும் வெறும் வாய்க்குத் தகுந்த பூட்டுப் போட்டிருக் கின்றனர் அறிஞர். நாளிதழ்களிலும், கிழமை, திங்கள் இதழ்களிலும் பல கட்டுரைகளும் வாதங்களும் வந்துள் ளன. வாதப் பிரதி வாதங்களை ஒழித்து இது செய்க என்று கட்டளையிட்டு நிறைவேற்றும் கட்டம் வந்துவிட்டது. தமிழகம், தமிழ்நாடு, என்று பேரில்லாவிட்டாலும், தமிழர் தமக் கென்ற நாட்டுப் பிரிவை அடைந்துவிட்டனர். தமிழ்தான் இந்த நாட்டு மொழி என்று அரசியலாரும் ஏற்றுக் கொண்டு சட்டமும் செய்துவிட்டனர். தமிழரசாட்சி கோயில்களில் துவங்காவிட்டால், வேறு எங்கே துவங் கும்? இந்து சமய அறநிலையத் துறைத் தலைவராகிய ஆணையரிலிருந்து, சின்னஞ்சிறு கோயிலில் தொண்டு செய் யும் சிறு தொழிலாளி வரை, இறை பணியாளர் யாவரும் இனி யாவற்றையும் தமிழிலேயே செய்யவேண்டும். இதைச் செய்விக்கும் கடமையோடு உரிமையும் நம் சமாசத் துக்கு உண்டு என்றால் மிகையாகாது.

இன்னுமொரு பெருங்குறை. அதைப் பற்றிச் சொல்லா மல் தீராது. சமயப்படிப்பு வேண்டாம் என்று நமது அரசியலும், கல்விப் பணியாளரும் ஒதுக்கியே விட்டனர். இந்த நிலை சரிதானா?

சமயம் என்பது பெரியவர்களால் சமைக்கப்பட்டு நமக்கென்று வைத்த வழி. வாழ்வின் உண்மையான பயனை உணர்த்தி எய்துவிக்கவல்லது.

மனித வரலாற்றை விருப்பு வெறுப்பற்ற கண்ணோடு பார்த்தால் இந்த உண்மை விளங்கும். ஒரு நாட்டின் நிலை தாழ்ந்தபோதெல்லாம் சமயம்தான் மக்களுடைய மனிதத்

தன்மையைக் காத்திருக்கிறது. நல்ல குறிக்கோளுக்காக வாழவும், ஏன், உளதாகும் சாக்காட்டையும் அதுதான் கற்றுத் தந்திருக்கிறது. மன்பதையை மனிதத்தன்மையி லிருந்து இழியாமல் அரணாக நின்று காத்ததும் சமயம் தான். உண்மையில் ஒன்றுபட்ட மனப்பான்மையை வளர்க்கவல்லது சமயம்தான். சமயம் என்ற இந்த ஊரத்தி லிருந்துதான் நல்ல பண்பாட்டுப் பயிர் வளரமுடியும். நாக ரிகத்தின் நாற்றங்கால் மட்டுமில்ல சமயம்; சமயமே நன் செய்ப் பயிர் எல்லாம்; பயிர்ப் பயனும் எல்லாம். பண்பாடு கல்வியால் வளரவேண்டிய ஒன்று என்பதில் யாருக்கும் ஐயம் இருக்கமுடியாது. ஆக, சமயச் சார்பற்ற கல்வி என் கிறார்களே! இது என்ன பொருளற்ற பேச்சு! இன்றைய கல்வியிலே ஒழுக்கத்தை வளர்க்கலாம்; ஆனால் ஓர் அசை யாத அடிப்படையாக நம்பிக்கை அமையாவிட்டால், வறட்டு ஒழுக்கம் நிலைக்கமுடியுமா? தனக்குச் சாதகமான சூழ்நிலை இருக்கின்றவரைதான் நிலைக்கும்; அந்தச் சூழ்நிலை கெடும்போது, ஒழுக்கம் நழுவிவிடும். நிலைத்த ஒழுக்கம் வளரவேண்டுமாயின் நம்பிக்கை வேண்டும் பாகற்காயைப் போன்ற கசந்த ஒன்றைத் தாய் நல்லது என்று சொல்லு வதால் தானே சாப்பிடுகிறோம்? இளம் வயதில் தாயின் மேல் வைத்த அந்த நம்பிக்கை தவறா? பாசத்தால் படர்ந்த நம்பிக்கையே உடலை வளர்க்க உதவிற்று என்கிறபோது, உள்ள வளர்ச்சிக்கும் எத்தனை தீவிரமான உணர்வு கலந்த நம்பிக்கை தேவை என்று எண்ணிப் பார்க்கவேண்டும். சமய வாழ்க்கையில் நம்பிக்கைதான் அடிப்படை. சில பல காரணங்களோடு அவ்வப்போது எழுந்த சில சமயக் கொள்கைகள் காலப்போக்கில் வெற்றுச் சடங்குகளாக மாறிவிட்டிருக்கலாம். நமக்கு இன்றைக்கு விளங்காத காரணத்தால் சில சமயச் சடங்குகள் நம்பத் தகாதவை யாக, வேண்டாதவைகளாகத் தோன்றலாம். இவைகளைக் கொண்டு நம்பிக்கை தளரும்போதுதான் சமயமே தளர்ந்து வாழ்க்கையே மாய்கிறது. நம்பிக்கைதான் எல்லா வழியி லும் மனிதனைப் பண்படுத்தும். அறிவால் மட்டும் மனிதன் வாழ்ந்துவிட முடியாது; அன்பும் சேரும்போதுதான் வாழ்க்கை முழுமை பெறுகிறது. இந்த முழுமை சமயத்தின் சார்பிலேதான், அதன் அடிப்படையிலேதான் எழமுடியும்.

நமக்கு விளங்காமற் போனதாலேயே சில கொள்கைகளை யும், சடங்குகளையும் வேண்டாதவை என்று ஒதுக்கிவிட முடியுமா? பிள்ளை பிறக்கும்பொழுது தந்தையை அடை யாளம் தெரிந்துகொள்ளும் அறிவோடு பிறப்பதில்லை; ஆனால் பிறர்காட்டக் கண்டு கொள்கிறது. பிறர் சொல் தானே என்று வேறு வகையில் எண்பிக்க முயலுமா? கலையுரைத்த கற்பனையை எல்லாம் நிலை எனக் கொண்டா டக்கூடாது என்றாலும், நம்பிக்கை என்ற இன்றியமையாத கருவியைக் கைதளர விடலாகாது.

சமயத்தின் போக்கில் குறைபாடுகள் உண்டாகிவிட்ட தால், சமயமே வேண்டியதில்லை என்று ஒதுக்கிவிடலாகாது. ஒழுக்கம், மட்டுமே போதாது; நிலைக்கவும் செய்யாது. சமயம் இல்லாவிட்டால் ஒழுக்கம் படம் இல்லாத சட்டம். வெறும் சட்டம் எவ்வளவு அழகாயிருந்தாலும், படத்தோடு பொருத்தும்போதுதான் பயன் உண்டாகிறது. அதைப் போல் ஒழுக்கம் சமயச் சார்பிலே எழும்போதுதான் நிலைத்து நிற்கமுடியும். இப்படிப்பட்ட ஒழுக்கம்தான் நமது ஆற்றலைத் தக்க வழியில் செலுத்தும். நமக்கும், நாட்டுக்கும் நல்லது செய்யும்.

இன்று சமயத்தின் நிலையென்ன? கோயில்கள் இருக் கின்றன; மடாலயங்களும் இருக்கின்றன; சில மேடை களில் ஒலிபெருக்கியும் அலறுகிறது; சமயம் என்பது இப் படி முடங்கிவிட்டது. உண்மையான சமய வாழ்வு வாழ்கிற பெரியவர்களை விரல்விட்டு எண்ணவேண்டிய நிலைக்கு வந்துகொண்டிருக்கிறது. இந்த நிலை மாறவேண்டாமா? ஒரு நாட்டுக்கு உண்மையான ஆக்கவேலையைத் தரக்கூடிய மக்களைச் சமுதாயம் உருவாக்க வேண்டுமாயின், சமய வாழ்க்கை, பள்ளிகளில் துவங்கியே ஆகவேண்டும். வீட்டில் முளைக்கும் சமய உணர்வு பள்ளி என்ற நாற்றங்காலில் வளரவேண்டும். சமயமாகிய உரம் பெய்யாமல் வாழ்க்கைப் பயிர் வளம் பெறாது. வீட்டிலே வைத்தும், வெளியிலுமே தாய்மார்களின் பணி என்ன என்று மங்கையர்க்குத் தனி யரசியும், திலகவதியாரும் காட்டியுள்ளனர். அத்தகையோர் காட்டியுள்ளபண்பாட்டினுல்தான் விஞ்ஞானத்தால் கிடைக் கின்ற புதிய ஆற்றல்கள் அழிவு வேலைக்காகாமல் ஆக்க வேலைக்கு ஆகும்; மன்பதை உண்மையான வாழ்ச்சிபெறும்.

சமயம் பற்றிச் சொல்லிக் கொடுப்பது, நாட்டில் பல சமயத்தார் இருப்பதால் பூசலை விளைவிக்குமென்று நினைக்கிறார்கள். சமயப் பூசல் இருக்கக்கூடாது என்பதற்கு சமயத்தையே ஒழித்துவிடுவது என்பதா பொருள்? முள் இருப்பதால் ரோசா மலரை யாரும் பறிக்காமல் இருப்பதில்லையே! மனிதனுடைய உண்மையான வளர்ச்சி உள்ளத்தையும், மூளையையும் பொறுத்தவரைதான், உடலின் தன்மையால் அல்ல, என்கிறது விலங்கியல் நூல், அதன் உயிர் நிலையான உள்ளது சிறத்தல் (Evolution) என்ற பகுதியில். சமயத்தையே ஒழித்துவிட்டால், மனிதன் உடலால் போரிட்டுத் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டிய அந்தப் பழைய, காட்டு நிலைக்குத்தான் போக முடியுமே அல்லாது, மனிதப் பண்பை வளர்த்துக்கொள்ள ஒருநாளும் முடியாது. நடந்த உலகப்போர் அத்தனையும் இந்த நிலையைத்தானே மெய்ப்பிக்கின்றன? பகையை ஒழிப்பது என்றால் பகைவரை அழிப்பது அல்ல; பகைமை உணர்ச்சியை மாற்றுவதுதான் உண்மை வெற்றி. வேல் கொண்ட வெற்றியினை நினைவு கூர்க. மாற்றானை மாற்றுயர்ந்த பசும் பொன்னாக்கி விட்டதே! வேலோடு மயிலையும் சேர்த்தே யன்றோ வெற்றி வேலனைப் போற்றுகிறோம்! சமயப் படிப்பினால் பண்படுகின்ற உள்ளம் சாதி சமயச் சழக்கில் ஒருநாளும் ஈடுபடாது; பூசலிட விழையாது.

சிலர் எல்லாச் சமயத்திலும் உண்மை இருக்கிறது. எனவே, இதில் கொஞ்சம், அதில் கொஞ்சம் என்று பிய்த்து வைத்துக்கொண்டு "எம்மதமும் சம்மதமே; இது தான் எம் சமயம்" என்று சொல்லுகிற மனப்பான்மையை வளர்த்திருக்கிறார்கள். இதை எண்ணும்போது பூக்குவளையில் வைக்கும் பூங்கொத்து நினைவுக்கு வருகின்றது. ஒவ்வொரு பூவும் ஒவ்வொருவிதமாய் அழகாய் இருக்கிறது. தன் தாய்ச்செடியில் இருக்கும்வரைதான் தன் பண்பாகிய மணத்தைப் பரப்புவதோடு தன் பயனாகிய பழத்தினையும் நல்கும். எல்லாப் பூக்களையும் பறித்து ஒன்றாக ஒரு பூக்குவளையில் வைத்துவிட்டால், சிறிதுநேரம் பார்க்க அழகாக இருக்கலாம். ஆனால் அந்த மலர்க்குவியலுக்கு ஒரு மலருக்கு உள்ள உயிர்த்தன்மை உண்டா? சிறிது நேரத்தில் அத்தனையும் வாடிவிடும். இதைப்போலவே, தோன்றுகிறது இந்தப்

பரந்த மனத்தை உடைய அன்பர்களது சமய நிலையும். மற்றவர் எவ்வளவு அழகாக இருந்தபோதிலும், பெற்றவளிடம் தானே அம்மா என்று கனியமுடியும்? ஆனால் சிலர் தம் சமயத்திலே குறைபாடு இருக்கிறதே என்று பிற சமயத்துக்குப் போகிறார்களே! இந்த மனநிலை எனக்கு விளங்குவதில்லை. ஒருவனுக்குக் கருவிலிருந்து ஊறிவந்த தாய்மொழியும், சமயமும்தான் உண்மையான உணர்வூட்ட முடியும், உள்ளத்தை வளர்க்கமுடியும். வேறு ஒரு சமயத்தின் கோட்பாடுகள் என்னதான் நன்றாகத் தோன்றினாலும் உயிரை வளர்க்குமா? எனவே பிள்ளைகள் சமயப் பாடமும் படிக்கவேண்டும்; அதுவும் வெறும் பொதுக் கொள்கைகளாகவும், கருத்துக்களாகவும் படிப்பதில் பயனில்லை. தன் சமயம் காட்டும் வழியிலேதான் பயிற்சிபெற வேண்டும். காந்தியண்ணல் தம் சமயம் தம் மனைவிபோல என்றார். என் சமயம் என் தாய்போல என்பேன். மாற்ற எண்ணினாலும் மாற்ற ஒண்ணாது.

நம் சைவ சமயம்தான் என்ன குறையை உடையது? குறுகிய எல்லையில் நிற்கவில்லையே? நடைமுறையில் நாளாவட்டத்தில் ஒட்டிவிட்ட ஒட்டடை இங்கும் அங்கும் உண்டு. உழவாரப் படை கொண்டு, திருவலகு பரிமாறிவிட்டால் போதும். அப்பரும், பிள்ளையாரும், அம்மையாரும் பிற பேரறிவாளர்களும் வளர்த்த அருஞ்சமயம் தமிழால் வளர்ந்த பெரும் சமயம், நல்ல பண்பாட்டையே வளர்க்கும், நல்ல வாழ்வையே நல்கும். தமிழ் மூலமே இந்தச் சமயம் கோயில்களிலும், பள்ளிகளிலும், இளம் நெஞ்சங்களில் குடியேறினால், உருவாகி வருகின்ற “ தமிழ் நாடு ” என்று பெயரிடப்படாத நம் தமிழகம் நல்ல ஆக்கம் பெறும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழும் வகையையும், உயிருக்கு உய்தியையும் தரவல்ல உண்மையான உயிர்க் கல்வி சமயம்தான். இந்தப் பாடத்தை, மற்றப் பாடத் திட்டங்களோடு சேர்த்து அமைத்து, புதிய பாடத் திட்டத்தைக் கொண்டு வந்து, சமயத்தையும், அதன் மூலம் நாட்டின் ஆக்கத்தையும் வளர்க்குமாறு, இந்தத் துறையில் பொறுப்பேற்றுள்ள பெரியவர்களுக்கு என் வேண்டுகோள்.

நமது பொதுக் காரியதரிசியவர்கள் எனக்கு இட்ட கட்டளை ஒன்று—என் பேச்சைக் கட்டுரையாக எழுதி,

அச்சேற்றி, இம்மாநாட்டிலே வழங்கவேண்டும் என்று. கட்டுரையாக எழுதாவிட்டாலும் பேச்சாக எழுதினேன். அவர்களது அன்புக் கட்டளையை அறவே மறுத்துவிட அஞ்சி. என் தந்தையார் போலவே என்னை ஏவல்கொள்ளும் உரிமை உடையவர்கள் அவர்கள். ஆயினும் அச்சிடுதல் என்ற அளவுக்கு எனக்குத் துணிவு பிறக்கவில்லை. அச்சேற்றும் அளவுக்கு அருமை ஒன்றும் என் பேச்சில் இல்லை என்று என் எண்ணம். ஆயினும் எழுதாக் கிளவி இது. அதாவது எழுத்துக்குள் முழுவதும் அமையாத மழலை மொழி இது என்று, அன்பின் கெழுதகைமையால் அமைச்சரவர்கள் அச்சிட விரும்பினல், உரிமை அவர்களிடமே. சித்தாந்த இதழ்களில் பகுதி பகுதியாகவோ, தனித்த இதழாகவோ, அச்சேற்றும் உரிமையை என்னைக் கேளாமலே அவர்கள் எடுத்துக்கொள்ளுதற்கு உரியர்.

தொகுத்துக்கூறி முடித்துக்கொள்வேன். அறிவும் அன்பும் இணைந்து செல்லாமல் முழுவாழ்வு அமையாது. மூளையும் வேண்டும், நெஞ்சும் வேண்டும். வெறும் அறிவு கடைபோகாது; அன்பே கடைத்தேற்றவல்லது. அன்பே சமயத்தின் உயிர்நிலை. சமய வாழ்க்கையே உண்மையான வாழ்க்கை. சமயமே வாழ்க்கையின் உண்மையான பயனை நல்கவல்லது. சமயம் மன்பதையில் பற்பல உருவிலே தோன்றி, நிகழ்ந்தபோதிலும், நமக்கு நம் தாய்ச் சமயமே கை தந்து வாழ்விக்கவல்லது. தாய்மொழி வழியேதான் இதுவும் நிகழற்பாலது. வேற்றுமொழி வேதனை வேண்டியதில்லை—உண்மையை அறிய உய்தியைப் பெற. சமயக் கல்வி விலக்கக் கூடாத ஒன்று, இன்றியமையாத ஒன்று. தாய்ச் சமயத்தைத் தாய்மொழியிலே கற்றுத்தரவேண்டும். உலகெலா முணர்ந்து ஓதற்கு அரிய பெரிய பொருளினை அங்க அடையாளங்களோடு கண்ணாரக் கண்டு காட்டவும் வல்லது—நம் செந்தமிழ்ச் செந்நெறி. வேதம் ஒரு அரண்யம். எங்கும் உள்ள செம்பொருள் வேதங்களிலும் மறைபொருளாகக் கிடந்தது. மறைக் காட்டிலே மறைந்து புதையுண்ட பொருளைக் காப்பு நீக்கிக் காட்டியது செந்நெறித் தமிழ். காப்பு நீக்கிக் காட்டியவர் நம் தமிழ் மொழி வேந்தர், மறைக் கதவம் திறக்கப்பட்டு விட்டாலும், மீண்டும் திருக்கடைக் காப்பு நிகழ்ந்தது. நிகழ்த்

நியவர் நான்மறைப் பிள்ளையார். நமக்கு உரிமை மறுக்கப்பட்டுள்ள அந்த வேதத்தில் நமக்கு மோகம் என்? செந்தமிழினைக் கொண்டே நாம் உய்தி பெறவேண்டும்.

வாழ்க நம் தமிழ்! வெல்க நம் தமிழ் நெறி!

இங்கே இந்த பெருவாய்ப்பையும், பெரு மதிப்பையும் எனக்குத் தந்து உதவிய பேரன்பர்களுக்கும், சிறப்பாக நமது பொது அமைச்சரவர்களுக்கும், பொறுமையோடு என் புல்லுரையைக் கேட்டருளிய தங்கள் பொன்னார் திருவடிகளுக்கும் நன்றியும், வணக்கமும்.

அறிக்கைகள்

அறநிலையப் பாதுகாப்பிலாகாவில் சமயப் பிரசாரகராக நியமனம் பெற்றுள்ள தமிழாசிரியர் திரு. ஆர். பஞ்சநதம் பிள்ளையவர்களைப் பாராட்டிப் பொன்னுடையும் "வரலாற்றுச் செல்வர்" என்ற பட்டமும், சிராப்பள்ளி மலைக் கோயில் 100 கால் மண்டபத்தில் 27—1—57-ல் வழங்கப் பெற்றன.

சமணர் மலை செல்வோம்: (ஆசிரியர் ஜீவபந்து டி.எஸ். ஸ்ரீபால், 132, தங்கசாலைத் தெரு, சென்னை-1. விலை அணா 8) இந்நூலில், மதுரைக்கு மேற்கே 5 மைல் தூரத்திலுள்ள சமணர்மலையின் வரலாறு, அதிலுள்ள பல கல்வெட்டுக்கள், சிற்பங்கள், இவற்றின் புகைப் படங்கள், சரித்திரச் சான்றுகள், ஆங்கில மொழிபெயர்ப்பு, சமண சமய நுட்பங்கள் முதலியன சுமார் 70 பக்கங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சரித்திர மாணவர்கட்கும், சமயப் பேரறிஞர்கட்கும் தேவையான சிறந்த நூல்.

கோலாலம்பூரில் 163 ஹை ஸ்ட்ரீட்டில் இருக்கும் திரு. கே. சிவநேயன் அவர்கள் 13—1—1957-ல் திரு. ம. பா. அவர்களைச் சந்தித்து, தமக்கும், திருவாளர்கள் என். பொன்னையா, என். கார்த்திகேசு, எஸ். தில்லையம்பலம், சி. குழந்தைவேல், வி. நரசிம்மன், எம். எஸ். சுப்பையா, என். கே. பிள்ளை, சி. ராமசாமி, வ. மாணிக்கம் (ஆக பதின்மர், இவர்கள் அங்கத்தினர் எண்கள் முறையே 4006, 4013, 4010, 4008, 3881, 3877, 3879, 4007, 3873, 4005) ஆகி

யோருக்கும் 1957-ம் வருடத்திற்குரிய சந்தாத்தொகை ரூபா நாற்பதையும் நேரில் செலுத்தி ரசீது பெற்றுக் கொண்டார்கள். மலேயா வாசிகளுக்கு 1956ஞு டிசம்பர் மாத இதழ் முழுமையும் பெற்றுக் கொண்டார்கள். 1957ஞு ஜனவரி பிப்ரவரி இதழ்கள் ஆயுள் அங்கத்தினருக்கும் சந்தா செலுத்திய பதின்மருக்கும் மட்டும் 10-2-57-ல் தபாலில் அனுப்பப்பெறும். ஏனையோர் சந்தாவை நேரில் அனுப்புக. அவர்கட்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது.

மலேயாவில் தேவாரம் அடங்கன்முறை விற்பனை மயிலைகிழார் இளமுருகனார் எனும் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் 1953-ல் வெளியிட்ட தேவாரம் அடங்கன்முறைப் பதிப்பு, மலேயாவில் கிளாங்கு (Klang) டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரியிலுள்ள திரு. ஆர். வி. கந்தையா அவர்களிடம் கிடைக்கும். விரைந்து பெற்றுக்கொள்க. ஆறு மாதங்கட்குள் ஆயிரம் பிரதிகட்குக் குறையாமல் விற்று முதல் செய்யப்பெற்றால், 1935-ல் வெளிவந்த திருப்புகழ் பதிப்பு இரண்டாம் பதிப்பாக விரைவில் அச்சு வேலை தொடங்கி வெளியிடப்படும்.

நூல் நிலையங்கட்கு அனுமதி: மயிலை கிழார் இளமுருகனார் வெளியிட்டுள்ள ஷை அடங்கன்முறைப் பதிப்பு எல்லா நூல் நிலையங்களிலும், கல்லூரி உயர்நிலைப்பள்ளி முதலியவற்றிலும் வாங்கலாம் என்று சென்னை மாநில கல்வித் தலைமை யதிகாரி உத்தரவளித்துள்ளார்.

அகஸ்தியர் மணி விழா: திருப்பாதிரிப்புலியூர் அகஸ்திய ஔஷதாலயம் - திருமந்திர மணி, வைத்யரத்ன பு. வே. தேவராஜ முதலியாரின் மணி விழாவில் (24-1-57) சமாஜச் சார்பில் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் மனம் கனிந்த ஆசியுரை வழங்கினார்கள். திரு. புலவர்-முருகவேள் பாமாலையால் சிறப்பித்தார்கள். விழாவில் சமாஜ அன்பர்கள், உற்றார், உறவினர் போந்து, மணி விழாத் தலைவர் கடலூர் நகராட்சி உறுப்பினராகவும், அண்ணாமலைப் பல்கலைக் கழக உறுப்பினராகவும் ஆற்றிய பணிகளையும், சிறப்பாக அவரது துறை போகிய சமய நூல் அறிவினையும் சமய வாழ்க்கையையும் நாட்டு வைத்தியத் தொண்டையும் பாராட்டினார்கள்.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 30 | துன்முகி பங்குனி 1957 மார்ச் | இதழ் 3

வேதாந்தத்தில் சித்தாந்தம்

(ஆசிரியர்)

இச்சொற்றொடர் வெகு வியப்பாகத் தோன்றும். பொதுமக்கள் சாதாரணமாக வேதாந்தமும் சித்தாந்தமும் மாறுபட்ட கொள்கைகள் என்று எண்ணுவார்கள். அது மெய்யெனில் எவ்வாறு வேதாந்தத்தில் சித்தாந்தம் இருக்கும் என்று கேட்பார்கள் அல்லவா? மேலும் பல் நூற்றாண்டுகளாகச் சமய உலகில் வேதாந்தமும் சித்தாந்தமும் முரண்பட்டு நின்று எதிர்த்து வாதாடின என்பது நம் பொதுக் கருத்து. அப்படிப்பட்ட வகையில் அவைகளைச் சமரசப்படுத்தவேண்டும் என்றும் பெருமக்கள் எண்ணினதுண்டு. அந்த வகையில் எழுந்த மற்றொரு சொற்றொடர் "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை" என்பது ஆகும். இந்தச் சொற்றொடரே இரண்டு கொள்கைகளும் வேறு என்றும், அவைகளைச் சமரசப்படுத்தும் தேவையும் ஏற்பட்டுவிட்டது என்றும் அறிவிக்கும் அல்லவா?

இனி, இவ்விரு சொற்களின் தொன்மைப் பொருள்களையும் வரலாற்றுப் போக்கையும் ஆராயும்பொழுது இவ்விரண்டிற்கும் உள்ள வேற்றுமை பொதுமக்கள் நினைக்கும் மட்டும் அத்தனை பிளவுபட்டது அல்ல என அறியலாம். வேதாந்தம் என்ற சொல், வேத+அந்தம் என இரு சொல் கூட்டால் ஏற்பட்டது. அதாவது வேதத்தின் முடிவு

என்பது அதன் பொருள். வடமொழி வேதம், மூன்று அல்லது நான்கு பெரும் பிரிவுகளாக உள்ளது. மந்திரம், பிராமணம், உபநிஷதம் என்ற மூன்ருகச் சாதாரணமாக வும், மந்திரம், பிராமணம், ஆரண்யகம், உபநிஷதம் என்ற நான்காகவும் கொள்ளுவர். இப்பிரிவுகளில் இறுதியில் உள்ளது உபநிஷதம். அதையே வேதத்தின் அந்தம் அல்லது முடிவு என்பர். இவ்வுபநிஷதம் 12 பெரும் பிரிவுகளாகவும் 96 சிறு பிரிவுகளாகவும் மொத்தத்தில் 108 பிரிவுகளாக உள்ளது. இப்பிரிவுகள் தத்துவஞானத்தைப் பலவகைகளில் எடுத்துக்காட்டுவன. இனி, சித்தாந்தம் என்ற சொல் சித்+ அந்தம் என்ற பிரிவுபட்டு முடிந்த முடிவு என்ற பொருள் கொண்டது ஆகும். இதுவும் தத்துவஞானத்தைப் போதிப் பது. உயிர்களின் இறுதியான முடிவை எடுத்து விளக்கும் சித்தாந்தம் என்ற சொல் வைணவத்திற்கும், சைவத்திற்கும் பொதுவாக அமைந்தது. ஆனல் பொதுமக்கள் இச்சொல்லைச் சிறப்பாகச் சைவத்திற்கே ஏற்றி, சித்தாந்தம் என்று சொன்ன அளவில் சைவ சித்தாந்தம் என்றே கொள்ளுவர். அதுபோலவே வேதாந்தம் என்ற சொல் வேதங்களின் முடிவான உபநிஷத்துக்களைக் குறித்தபோதிலும், சிறப் பாகச் சங்கரர் உபதேசித்த அத்துவைதக் கொள்கை களுக்கே எடுத்துக் கூறுவர். வேதாந்தம், அத்துவிதம், துவிதம், விசிட்டாத்துவிதம் என்ற மூவகைக் கொள்கை களுக்கும் பொதுவானதுதான். ஆனல் சங்கரர் சமயத் திற்குச் சிறப்பாகக் கூறுதல் உலக வழக்கு.

ஆகவே வேதாந்த சித்தாந்தங்கள் என்னும்போது அத்துவைதம், சைவ சித்தாந்தம் என்ற எண்ணங்களையே நமக்கு ஊட்டி இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும். அத்துவைதத்தில் மெய்ப்பொருள் ஒன்றே தான். ஆன்மாக்கள் அம்மெய்ப்பொருளின் பொறிகள் அல்லது கூறுகள். இறுதியில் ஆன்மாக்கள் மெய்ப்பொரு ளில் ஒன்ருகிக் கலந்து மறையும் என்பதாம். சித்தாந்தத் தில் பொருள்கள் மூன்று. அவை பதி, பசு, பாசம் என்று பெயர் பெற்றவை. இம்மூன்றும் என்றும் உள்ள பொருள் கள். பசு என்ற ஆன்மா பாசத்தைவிட்டு விலகி இறைவன் பாதத்தில் அடைவதே மோட்சம் என்பதாம். ஆகவே இறுதி நிலையில் அத்துவிதத்திற்கும், சித்தாந்தத்திற்கும்

வேறுபாடு உண்டு. இந்த வேறுபாடுகளே சமயப் பூசல்களை விளைவித்துக் கணக்கற்ற நூல்கள் தோன்றுதற்குக் காரணமாக இருக்கின்றன. ஆனால் தொடக்கத்தில் இவ் வேறுபாடுகள் முற்றியிருந்ததாகத் தெரியவில்லை.

வேதாந்தம் என்ற பொதுப் பெயரில் வழங்கும் உபநிஷத்துக்கள் 108 என்று பொதுவாகக் கூறப்பட்ட போதிலும், அவைகளில் 10 சிறந்தவைகளாகவும் மிகத் தொன்மையானவையாகவும் ஏற்பட்டுள்ளன. அவைகள் பொதுவாகத் தத்துவ ஞானத்தைக் கூறுகின்றன. அவைகளின் பெயர் ஈசம், கேனம், கடம், பிரஸ்னம், முண்டகம், மண்டுகம், தைத்திரம், ஐத்ரேயம், சந்தோக்யம், பிருகதாரண்யகம் என்பன. வேதாந்தக் கொள்கைகளை நிரூபிக்க இவைகளிலிருந்தே மேற்கோள்கள் காட்டப்படுகின்றன. இனி சுவேதாஸ்வதரம், கௌசிதகம் என்ற இரண்டையும் ஆதார நூல்கள் ஆகக்கொள்ளுவர். மற்றுமுள்ள 96 உபநிஷத்துக்களோ சிறியவைகளாகவும், சமயப் பிரிவினை கொண்டவைகளாகவும் இருக்கின்றன. அவைகளில் சாமான்யமான வேதாந்தத்தைப் புகட்டுவது 23 நூல்கள், யோகத்தைப் புகட்டுவது 20 நூல்கள், சன்யாசத்தைப் புகட்டுவது 17, வைஷ்ணவத்தைப் புகட்டுவது 14, சைவத்தைப் புகட்டுவது 14, சாக்தத்தைப் புகட்டுவது 8 ஆகும். இந்த உபநிஷத்துக்கள் நிலைநாட்டும் கொள்கைகள் பொதுவாக இல்லாமல் தங்கள் தங்கள் தேவர்களைப் பெருமைப்படுத்திப் பேசுவன. புராணங்களில் காணும் இன வேற்றுமைகளை இவைகளில் காணலாம். ஆகவே இவைகள் பிற்காலங்களில் தோன்றியவை என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இன வேற்றுமை கூறிச் செல்லும் வைதீகர்கள் " வேதம் கூறுகிறது " என்று சொல்லும்போது எல்லாம் இந்த இன வேற்றுமை கூறும் உபநிஷத்துக்களிலிருந்தே மேற்கோள்கள் காட்டுவார்கள். இவ்வாறு தோன்றும் உபநிஷத்துக்களிலிருந்துதான் வைணவம், சைவம், சாக்தம் என்ற பிரிவினைகள் காட்டப்படுகின்றன.

இனி; சைவத்தைப் பற்றிக் கூறும் உபநிஷத்துக்கள் பெரியவைகளில் ஒன்றும் சிறியவைகளில் 14-ம் ஆக 15 ஆகும். பெரிய உபநிஷத்துக்களில் சுவேதாஸ்வதரம் என்பது ஒன்று. சிறியவைகளில் அக்ஷமாலிகா, அதர்வசிகா,

அதர்வசிர, காலாக்னிருத்ர, கைவல்ய, காணபத்ய, ஜபாலிய, தக்ஷிணாமூர்த்தி, பஞ்சப்பிரமம், பிரகத் ஜபால, பஸ்ம ஜபால, ருத்ரக்ஷ்ருதய, ருத்ராக்ஷ ஜபாலி, சரப என்பவைகள். இவைகள் சிவபராக்கிரமத்தை விளக்குகின்றன. சிவமே முழுமுதற் கடவுள் என்று கூறுகின்றன. மற்றும் சிவனுடைய சின்னங்களான, ருத்ராக்ஷம், பஸ்மம் முதலியவைகளைச் சிறப்பித்தும் சிவமூர்த்தங்களான, காலாக்னிருத்ரன் தக்ஷிணாமூர்த்தி, சரபம் முதலிய உருவங்களைச் சிறப்பித்தும் சிவகுமாரனாகிய கணபதியைச் சிறப்பித்தும் சைவத்தை நிலை நாட்டுகின்றன.

பெரிய உபநிஷத்துக்களில் ஒன்றான சுவேதாஸ்வதர உபநிஷத்து சைவ பரத்துவத்தை நிரூபிப்பது. அது யசுர் வேதத்தில் தைத்திரிய வகுப்பிற் சேர்ந்தது. முதல் பத்து உபநிஷத்துக்களில் சேர்க்கப்படாமல் இருந்தபோதிலும் அது மிகத் தொன்மையானதும் சிறந்ததும் ஆகும். இந்நூலில் ருத்திரத் திருவுருவத்தில் கடவுள் ஆளப்படுகிறார். அவரே பிரபஞ்சத்திற்குக் காரணபூதராயுள்ளவர். அதிலிருந்து பிரபஞ்சம் தோன்றிக் காப்பாற்றப்படுகிறது. ருத்திரனே முழுமுதற் கடவுள் என்று பாராட்டப்படுகிறார். இந்த உபநிஷத்திற்கு அதனைப் போதித்த முனிவருடைய பெயர் இடப்பட்டிருக்கிறது. இந்நூல் சுலோகங்களால் ஆனது. உலகத் தோற்றம், பிரிவினைப் பகுதிகள், முழுமுதற் கடவுள் அதனைக் காத்தல், அவனை அறிந்து அவனை அடைதல் முதலிய கோட்பாடுகளை இந்நூல் கூறுகிறது.

மற்ற 14 சைவ பரமான உபநிஷத்துக்களும் ருத்திரனுடைய பெருமையைக் கூறி, அவரே முழுமுதற் கடவுள் என்று சிலாகித்துக் கூறுவன. ருத்திர சைவக் கொள்கை வெகு பண்டையது. சிந்து நதி தீரத்துப் பண்டைய நாகரிகத்திலும் அதனைக் காண்கிறோம். இருக்கு வேதத்தில் ருத்திரன் ஒரு பயங்கரமான தெய்வமாகக் கொள்ளப்பட்டிருக்கிறான். வானத்திலிருந்து இடிகளையும் மின்னல்களையும் வீசுகிறான் என்றும் அது கூறுகிறது. ஆனால் சுவேதாஸ்வதரம் அவனைச் சாந்தமூர்த்தியாக்கி யாதொரு தீமையும் இன்றி உலகைக் காக்கும் கடவுளாகக் கொள்ளுகிறது. ஆகவே கொடிய மூர்த்தியாக இருந்த ஒரு மூர்த்தி இந்த உபநிஷத்துக் காலத்தில் ஒரு சாந்தமூர்த்தியாகப் பரிணமிக்கிறது.

இந்த மாறுதலானது மற்றச் சிறு உபநிஷத்துக்களில் மேல் கொண்டும் பெருக்கப்பட்டிருக்கிறது. அந்நூல்களில் அவன் பசுக்களுக்கு (ஆன்மா)ப் பதியாகி (இறைவன்) பசுபதி ஆகிறான். பதியைப் பசுவினிடம் பிரிப்பது அவித்தையே. அதனை ஒழித்துவிட்டால் பசுபதியிடம் சேர்ந்துவிடும் என்ற கோட்பாட்டை இந்தப் பதினான்கு உபநிஷத்துக்களும் கூறுகின்றன. இவைகளில் மேல்கொண்டு சிவபிரானுடைய அக்கமாலை, திருநீறு முதலிய சின்னங்களும் அவைகளின் பெருமைகளும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இறைவனை அடைதற்கு இந்தச் சின்னங்கள் வழிகாட்டிகளாக இருக்கின்றன என்று அவை கூறுகின்றன.

இந்தப் பதினைந்து சிவ உபநிஷத்துக்களும் சைவ சித்தாந்தக் கொள்கைகளை நிரூபிக்கின்றன. ஆகவே உபநிஷத்துக்களாகிய வேதாந்தத்தில் சைவ சித்தாந்தம் சொல்லப் பட்டிருக்கிறது அல்லவா ? எனவே வேதாந்தத்தில் சித்தாந்தம் என்ற தொடர் முரண் ஆனதல்ல என்க.

இன்பியல் மனிதன்*

1. எவனுடை வாழ்க்கை நேர்மை
 எய்திநன் றொளிரும் ? யாவன்
அவமிகு செயலும் சூதும்
 அறிவிலாச் செருக்கும் இன்றி,
நவமிகும் உளத்தி னோடு
 நல்வழி இன்பம் துய்த்துத்,
தவமிக அமைதி யோங்கத்
 தன்னரும் நாள்கள் உய்ப்பான் ?

2. நிறைபெருஞ் சீரின், யாவன்
 நினைந்துதற் காத்துக் கொள்ள
மறைவழிச் சுருங்கை வேண்டான் ?
 மதிலொடு படைகள் வேண்டான் ?

---

* "The Character of a Happy Man" என்னும் ஆங்கிலக் கவிதையின் மொழிபெயர்ப்பு.

அறைகடல் ஆழத் தச்சம்,
அகன்றவான் உருமே றெல்லாம்
இறையள வஞ்சான் கண்கள்
இனிதுறக் காண வல்லான் ?

3. எத்தகை விழைவ வாவும்
எய்த்திடல் கூடா ! மற்றவ்
வித்தகன் தன்னைத் துன்பும்
மெலிவித்தல் ஒல்லா ! ஊழின்
மொய்த்துறு கவலை, நன்மை
முனைத்திடா யாவும் ! என்னின்,
இத்தகு மனிதன் தானே
இன்பியல் மனிதன் என்க !

4. துறக்கமே அவன்றன் நூலாம் !
தூயவான் பொருள்கள் ஞானம் !
சிறப்புயர் நல்லெண் ணங்கள்,
செறிவொளிர் அவன்றன் தோழர் !
குறிக்கொளக் கழித்த வாழ்நாள்,
குறைவறு செல்வ மாகும் !
நெறிக்கொளிவ் வுலகோர் இல்லும்,
நீள்வழிச் செலவும் ஆமே !

—புலவர் - முருகவேள், பி. ஓ. எல்.

திருத்தொண்டின் நெறி

[சித்தாந்தக் கலைமணி - வித்துவான் -
சி. அருணைவடிவேலு முதலியார்]

' திருத்தொண்டின் நெறி ' என்பது சித்தாந்த சைவ நெறியைக் குறித்தற்குச் சேக்கிழார் ஆண்ட ஒரு தொடர். எனவே, ' சித்தாந்த சைவமாவது திருத்தொண்டின் நெறியே ' என்பது விளங்கும்.

' தொண்டு ' என்பது, தலைவராய் இருப்பார்க்கு அவ ரால் ஆளப்பட்டார் செய்யும் பணி. அதற்குத் ' திரு ' என்

னும் அடைபுணர்த்துத் ‘ திருத்தொண்டு ’ எனக் கூறின், அது திருவடி, திருக்கோயில் முதலியனபோல இறைவனுக்குச் செய்யும் தொண்டினைக் குறிக்கும். ‘ திருத்தொண்டு ’ என்பது இறைவன் பணி எனவே, அதனைச் செய்வோர் ‘ திருத்தொண்டர் ’ எனப்படுவர் என்பது சொல்லாமே அமையும்.

இனி இறைவன் பணியைச் செய்வோர் யாவரும் பொதுவாகத் ‘ திருத்தொண்டர் ’ எனப்படுதற்கு உரியராயினும், அஃது, இறைபணியையே தமது முதன்மைத் தொழிலாகவும், ஏனையவற்றை அதற்குப் பயன்படும் துணைத் தொழில்களாகவும் கொண்டோரையே குறிக்கும் என்க. இதனானே, இத்தகையோரைத் தொகுத்துக் கூறிய தேவாரத் திருப்பதிகம் ‘ திருத்தொண்டத் தொகை ’ எனவும், வகுத்துக் கூறிய திருவந்தாதி ‘ திருத்தொண்டர் திருவந்தாதி ’ எனவும், விரித்துக்கூறிய புராணம் ‘ திருத்தொண்டர் புராணம் ’ பெயர் பெறுவவாயின என்க.

ஒவ்வொரு சமயத்திலும் அதன் அடிநிலைக் கொள்கையாகிய தத்துவக் கொள்கைகள் ஒவ்வொரு வகையாய் இருத்தல்போலவே, அதன் முடிநிலைக் கொள்கையாகிய ஒழுக்க நெறியும் ஒவ்வொருவகையாய் இருக்கின்றது. பௌத்த சமயத்தில் கணபங்க நியாயம், சூனிய வாதம் முதலியவை தத்துவக் கொள்கை; ‘ தயாமூல தர்மம் ’ அஃதாவது, ‘ எல்லா உயிர்களிடத்திலும் கொள்ளும் இரக்கமே முதல் அறம் ’ என்பது ஒழுக்கநெறி. சமண சமயத்தில் அணுகாரண வாதம், சமுச்சய வாதம், கன்ம வாதம் முதலியன தத்துவக் கொள்கை; நோன்புகளால் உடலை ஒறுத்தொழித்தலே ஒழுக்க நெறி. பிற பிற சமயங்களினும் இவ்வாறே உள்ளன. சிவநெறியில் முப்பொருள் உண்மை, சற்காரிய வாதம், சுத்தாத்துவிதம் முதலியன தத்துவக் கொள்கை; இறைபணியே ஒழுக்க நெறி. இதனால், சிவநெறி என்பது திருத்தொண்டின் நெறியே என்பது புலனாம். இது பற்றியே,

“ மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றே !

வானிடத் தவரும் மண்மேல் வந்தான் றனையர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலு மூமர் ஒன்றையு முணரா ரந்தோ !

என்றது சிவஞானசித்தி. சைவ சித்தாந்தத் தலைமணி நூலாகிய சிவஞானபோதத்தினும், 'சரியை கிரியா யோகங்களானே ஞானம் உளதாம்' எனவும், 'ஞானங் கைவரப் பெற்றோராகிய சீவன் முத்தர்க்கும் அடியார் வழிபாடும், திருக்கோயில் வழிபாடும் இன்றியமையாதன எனவுங் கூறப்பட்டன. இதனால், சிவநெறியில் திருத்தொண்டே ஞானத்தின் முதலும், முடிவுமாதலை நன்குணரலாம். சிவநெறி, திருத்தொண்டினையே ஞானத்தின் முதலும், முடிவுமாய் உடையதெனின், அதனைத் 'திருத்தொண்டின் நெறி' எனக் கூறாது, வேறெவ்வாறு கூறுவது !

பிற சமயங்களினும் கடவுள் வழிபாடு பொதுவாகக் கூறப்படினும், இவ்வாறு தத்துவ நூல் முறையில் அதனை இன்றியமையாச் சிறப்பினதாகக் கூறுதல் இல்லை. இன்னும், 'கடவுளது திருவுருவங்களையும், கடவுளது அடியார்களையும் கடவுள் எனவே கொண்டு கும்பிட்டுக் கூத்தாடுதலால் தத்துவ ஞானமும், வீடுபேறும் எவ்வாறுள்வாகும்' என இகழ்ந்துரைக்கும் போக்கினையும் அவை யுடையனவாய் இருக்கின்றன. 'கடவுள் வழிபாடு மனநலம் உண்டாதற்கு ஒருபடியே யெனினும் ஞானிகட்கு அது வேண்டாததொன்றே' என்பது அச்சமயங்களின் கோட்பாடு. ஆகவே, சைவ சித்தாந்த நூல்களினன்றிப் பிற சமய நூல்களில், 'இறைவன் திருத்தொண்டே ஞானத்தின் முதலும், முடிவுமாகும்' என்னுங் கருத்தைக் காண்டல் இயலாது. இக்கருத்துப் பிற சமய நூல்களில் ஒன்றினுங் காணப்படாது சைவ சித்தாந்த நூல்களின் மட்டுமே காணப்படுவதாகும். அதனாற்றான் 'சைவ சித்தாந்த நூல்களும் ஞான நூல்களே' என்னுங் கருத்துச் சிறிதாயினும் உடையவரிடத்தே கடவுள் வழிபாட்டில் உண்மைப் பற்றும், அதனை உடையவர்களைப் பெரியோராக மதிக்கும் மதிப்பும் இருத்தலையும், அக்கருத்துச் சிறிதும் இல்லாதாரிடத்தே அப்பற்றும், மதிப்பும் சிறிதும் இல்லாமையும் நாம் காண்கின்றோம். ஆகவே, அவர்கள் 'ஈசுர பத்தி, கடவுள் வழிபாடு' எனக் கூறுவனவெல்லாம், தமிழ்நாட்டின் பண்பாடு, இறை

பணியை இகழும் நெறியை நன்னெறியெனக் கொள்ளாத தாய் இருத்தல் பற்றி உண்டாகும் அச்சம் பற்றியனவே யாம் என்க. இங்ஙனமாகவே, சைவ சித்தாந்தமே திருத் தொண்டின் நெறியாவதென்க.

திருத்தொண்டத் தொகையுட் போந்த அடியவர் அனை வரும் இறைவன் பணியையே தம் வாழ்க்கையின் முதன் மைப் பணியாகக் கொண்டவர்கள் என்பதைச் சேக்கிழார், அவர் அனைவர்க்கும் பொதுப்படக் கூறிய திருக்கூட்டச் சிறப்பில், " பாரம் ஈசன் பணியலது ஒன்றிலார் " (பெரிய புராணம் திருக்கூட்டச் சிறப்பு 9) எனக் குறித்தருளினர்.

இனி, மனமொழி மெய்களின் யாதொன்றாற் செய்யும் இறைபணியாயினும் அது திருத்தொண்டேயாமாயினும், மெய்யாற் செய்யப்படும் தொண்டே சிறப்பாகத் திருத் தொண்டெனப்படும் என்பது, இறைவனுக்குச் செயத் தகுங் கடப்பாட்டினைப் ' பணி ' ' தொண்டு ' எனச் செயல் மேல் வைத்துக் கூறுமாற்றான் அறியப்படும். ஆகவே, மெய்யினாற் செய்யப்படும் தொண்டு உளதாய வழியே திருத்தொண்டு நிரம்புவதாம் என்பது பெறப்படும். மெய்யி னாற் செய்யப்படும் தொண்டினைச் சேக்கிழார் " கைத்திருத் தொண்டு செய்கடப்பாட்டினர் " (திருக்கூட்டச் சிறப்பு 5) எனத் திருத்தொண்டர்களது கடப்பாடாகக் குறித்தமை யான், மேற்கூறிய கருத்து ஐயமின்றி விளங்குவதாம்.

திருத்தொண்டத் தொகையுட் போந்த நாயன்மார் கைத்தொண்டினைக் கடப்பாடாகக் கொண்டவர் என்பது அவர்களிற் சிலருக்குச் சொல்லப்படும் செய்தற்கருஞ் செயல் நிகழ்ச்சியால் தோன்றுதாயினும், அவரது புராணங்களின் தொடக்கத்தில் எல்லாம் அவரது அன்றாட வாழ்க்கை முறையினை விளக்கும் சேக்கிழாரது திருமொழிகளால் நாம் அதனைத் தெள்ளித் தெளிய உணரலாம். எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டு புராணங்களைப் பார்க்கலாம். ' உருத்திர பசுபதி நாயனார் ' என்பவர் திருவுருத்திர மந்திரத்தைச் சொல்லி அதனானே முத்தியடைந்தவராகச் சொல்லப்படு கின்றார். அதனால், அவர் கைத்தொண்டு ஒன்றும் செய் திரார் என்று நாம் கருதுதல் கூடும். ஆயினும், சேக்கிழார் அவரது ஒழுக்க நெறியை முதற்கண் கூறுமிடத்து,

"செங்கண் மால்விடை யார்செழும் பொன்மலை வல்லி
பங்க னார்அடி மைத்திறம் புரிபசு பதியார்"

என்கின்றார். அடிமைத்திறம் புரிதல் என்றது கைத்திருத்தொண்டினையன்றிப் பிறவற்றனே அமைந்தவற்றை என்றல் சாலாது.

'ஆனாய நாயனார்' என்பவர் ஆயர்குலத்தவர். அவர் புல்லாங்குழலில் திருவைந்தெழுத்தை வாசித்து முத்தியடைந்தவராகக் கூறப்படுகின்றார். அவர் கைத்தொண்டு செய்திருத்தல் இயலாது என நாம் எண்ணலாம். ஆயினும், சேக்கிழார் அவரது பெருமையை முதற்கண் கூறுமிடத்து, "வாயினின் மெய்யின் வகுத்த மனத்தின் வினைப்பாலிற்— பேயுட னாடு பிரானடி யல்லது பேணாதார்" என்கின்றார். அதனான் அவரும் பேயுடனாடு பிரானடிக்கு மெய்யின் தொண்டினை இயலுந் திறத்தாற் செய்தவர் என்பது விளங்கும். இவ்வாறே பிற நாயன்மார் புராணங்களிலும் சேக்கிழார் கூறிச் செல்வதை உணரலாம்.

இந்நிலையில் சேக்கிழார் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் புராணத்தின்மட்டும் அவர் கைத்தொண்டு செய்தாரெனக் கொள்ளுதற்கேற்ற குறிப்பெதுவும் கூறவில்லை. அதனால், அதற்கொரு காரணம் உண்டென நாம் கொள்ளுதல் கூடும். அஃதாவது: 'பாணர்' என்னும் இனத்தவரும் பஞ்சமராகவே அக்காலத்திற் கொள்ளப்பட்டமை, இந்நாயனாரைப் பற்றிப் பெரிய புராணத்துட் பலவிடத்தும் கூறப்பட்டுள்ள பல நிகழ்ச்சிகளாலும் அறியப்படுகின்றது. பஞ்சம குலத்தவராகிய திருநாளைப் போவார் நாயனாரும் அக்குலங் காரணமாகவே சிவன் திருக்கோயிலுக்கோ அல்லது சிவனடியார்களுக்கோ அணுக்கமாய்ச் செய்யுந் தொண்டினைச் செய்ய இயலாதவராய்த் திருக்கோயிலில் முழக்கப்படும் பேரிகை முதலிய வாத்தியங்களுக்குத் தோலும், வாரும் கொடுத்தலும், அபிடேகத்திற்குக் கோரோசனை கொடுத்தலும் செய்துவந்தார். இந்நாயனார் குலத்திற்கு அதுதானும் கூடாமையால் கைத்தொண்டிற்குத் தமது பிறப்புத் தடையாய் இருத்தலை எண்ணித் தமது குலத்திற்குரிய பாடற்றொழிலை இறைவனுக்கு ஆக்கி வந்தாராவர். ஆதலின், இந் நாயனாரது புராணத்தில் கைத்

தொண்டு செய்தமை கூறப்படவில்லை யென்க. இதனால், திருநாளைப் போவார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் போன்ற உண்மைச் சிவனடியார்க்குப் பஞ்சமப் பிறவி எத்துணை மனவருத்தத்தை அளித்திருக்கும் என்பதை நாம் எண்ணுதல் வேண்டும்.

இனித் திருமூல நாயனார் கைத்தொண்டினை மேற்கொள்ளாது சிவயோகத்தில் அமர்ந்திருப்பவராயினும் 'மூலன்' என்னும் ஆயன் இறந்துபட, அதுபற்றி அவனால் மேய்க்கப்பட்ட ஆக்கள் அடைந்த துன்பத்தினைக் கண்டு தாம் அவ்வாயனாகி அவற்றை மேய்க்க முற்பட்டது, அச்செயல் சிறந்த திருத்தொண்டாதல் பற்றியேயாம். ஆக்களின் பெருமைகளையும், அவற்றை மேய்த்தல் சிறந்த திருத்தொண்டாம் என்பதனையும் சேக்கிழார் சண்டேசுர நாயனார் புராணத்தில் விரித்து விளக்கினாராகலின், அதனை இந்நாயனார் புராணத்தில் விரியாது, சைவ நெறி மெய்யுணர்ந்தோர் ஆனினங்கள் தாமேமுன் - பைய நடப்பன...பின் போனார்" எனக் குறிப்பாற் கூறியருளினார். அதனால், இடம் வாய்த்துழித் திருமூல நாயனாரும் கைத்தொண்டு செய்தமை இனிது பெறப்படும்.

சடையனாரும், இசை ஞானியாரும் திருத்தொண்டத் தொகைபாடித் திருத்தொண்டின் பெருமையையே சிறந்தெடுத்து விளக்கி, அதனை என்றென்றும் உலகில் நிலவச் செய்த பேராசிரியராகிய நம்பி ஆரூரரை மைந்தராகப் பெற்றவரெனின், அவ்விருவரும் அவரைப் பெறுதற்கு முன்னும், பின்னும், திருத்தொண்டில் எவ்வளவு தலைசிறந்திருத்தல் வேண்டும் என்பதும், பிறவும் தாமே விளங்குதலால், சேக்கிழார் அவ்விருவர்க்கும் அவ்வொரு பெருமையே கூறிப் பிறிதொன்றுங் கூறாது, அவரை " என் சிறுபுன் - மொழியாற் புகழ முடியுமோ! முடியாது; எவர்க்கும் முடியாதால் " என்றொழிவாராயினர். அன்றியும் அவ்விருவரும், " மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும் - வேதியர் குலத்தினர் " எனத் தடுத்தாட்கொண்ட புராணத்திற் கூறினமையானும் அவரது திருத்தொண்டு பெறப்படுமென்க.

இதனால், திருத்தொண்டத் தொகையுட் போந்த அடியவர்களுள் பிறப்பிலே தடையுடையாரன்றிப் பிறரொரு

வரும் கைத்தொண்டினைச் செய்யாதொழிந்தார் இலர் என்பது விளங்கும். ஆயினும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அதனைச் செய்யாமையால், அஃது அவர்க்கு ஒரு குறையே என்பதனை நமது பெருமான் உலகிற்கு எடுத்துக் காட்டி விளக்கினானென்க. அஃதாவது, திருவீழிமிழலையில் திருநாவுக்கரசருக்கு அருளிய படிக்காசினை வாசியிலதாகவும், திருஞானசம்பந்தருக்கு அருளிய படிக்காசினை வாசியுடையதாகவும் ஒருகாலத்திற்றானே இறைவன் அருளியது கைத்தொண்டின் இன்றியமையாமையை விளக்குதற் பொருட்டேயாம் என்க. அப்பொழுது இருவர் படிக்காசிற்கும் உள்ள வேற்றுமையைத் திருஞானசம்பந்தர் முன்னர் அறியாதிருந்து பின்னர் அறிந்தபோது, 'ஆம்; அக்காசுகள் அவ்வாறிருத்தல் முறையே; ஏனெனில், திருநாவுக்கரசர் பெறுங்காசு தொண்டாற் பெறுங்காசு; யான் பெறுவது தொண்டின்றிப் பெறுங்காசு. ஆயினும், யான் திருத்தொண்டினைப் புறக்கணிப்பான் ஒழிந்தேனில்லை என்பதனை எமது பெருமானிடம் விண்ணப்பித்துக் கொள்வேன்' எனச் சிந்தித்துணர்ந்தார் என்பதனைச் சேக்கிழார்,

> "திருஞான சம்பந்தர் அதனைக் கேட்டுச்
> சிந்திப்பார் சிவபெருமான் நமக்குத் தந்த
> ஒருகாசு வாசிபட மற்றைக் காசு
> நன்றாகி வாசிபடா தொழிவான் அந்தப்
> பெருவாய்மைத் திருநாவுக் கரசர் தொண்டாற்
> பெறுங்காசாம் ஆதலினாற் பெரியோன் தன்னை
> வருநாள்கள் தருங்காசு வாசி தீரப்
> பாடுவன்என் றெண்ணிஅது மனத்துட் கொண்டார்"

என்று நன்கு விளக்குகின்றார். சிவபெருமானது திருமாமகனாராயும், சிவநெறியின் முதற்பேரருளாசிரியராக அப்பெருமானாலே சிவிகை, குடை, சின்னம் முதலிய விருதுகள் அளிக்கப் பெற்றோராயும் விளங்குகின்ற திருஞானசம்பந்தர் தமக்கும் கைத்தொண்டு இன்றியமையாதது என நம் பெருமான் காட்டுவனாயின், நம்போலியரெல்லாம் அவனுக்குக் கைத்தொண்டு செய்யாதே அவனருட்கு உரிமை கொண்டாடுதற்கு எவ்விடத்தேம்!

இந்நிகழ்ச்சியை நோக்குமிடத்து, சுந்தரமூர்த்தி நாயனார் திருப்புன்கூர்த் தேவாரத் திருப்பாடலொன்றில், "நற்றமிழ் வல்ல ஞான சம் பந்தன் நாவினுக் கரையன் நாளைப்போ வானும்" என்றெடுத்துக்கொண்டு இவரெல்லாம் "குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங் கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்" என இறைவனைப் பாடியதில், ஞானசம்பந்தர் மாட்டு இருந்ததொரு குறையாகக் குறித்தது,இக் கைத்தொண்டு செய்யாமையே எனக் கூறுதல் பொருந்தும் எனக் கொள்ளலாம்; அதனை அறிஞர்கள் ஆய்ந்து கொள்வார்களாக. இதனால், 'சிவ நெறியாளர்' எனப்படுவோர் எவர்க்கும் கைத்தொண்டு செய்தலில் விலக்கில்லை என்பது போதரும். போதரவே, சிவநெறியாவது திருத்தொண்டின் நெறியே என்பது முடிவாம். உண்மை இங்ஙனமாயின், சிவநெறியின் இயல்பினை எண்ணின், அது நம்மனோர்க் கெல்லாம் சிறிது அச்சத்தை விளைப்பதெனவுங் கூறலாம். நம்மனோர்க்கு அச்சத்தை விளைப்பதென்ப தென்னை? மால் அயன் முதலிய தேவர்கட்கும், முனிவர்கட்குங்கூட அச்சத்தை விளைப்பதாகும் அந்நெறி. அதுபற்றியே சேக்கிழார், திருத்தொண்டர்களது பெருமையைச் சிவபெருமான்றானே சுந்தரமூர்த்தி நாயனார்க்கு விளக்கியருளுமிடத்து, "அருமையாம் நிலையில் நின்றார்" (தடுத்தாட்கொண்ட புராணம். 196) என விளக்கினான் எனவும், மற்றும் பல இடங்களில் நாயன்மார்களது நிலை அமரர்க்கும், முனிவர்கட்குங்கூட அணுகலரிய நிலை எனவும் குறித்துள்ளார். அங்ஙனமாயின் நமது உண்மை நாயன்மார்களது பெருமைதான் என்னே! என்னே!!

இத்தகைய அருமை வாய்ந்த நெறி திருத்தொண்டின் நெறியாயின், அதன் முழுநிலையும் எய்தப் பெற்று, உலகிற்கும் அதன் சிறப்பினை விளக்கியருளிய அருளாசிரியர் திருநாவுக்கரசு நாயனாரே ஆகின்றார். என்னை? அவரே,

"...........................மனத்தொடு வாய்மையுடன்
மெய்யுற்ற திருப்பணி செய்பவராய் விரவுஞ்சிவ சின்னம் விளங்கிடவே
எய்துற்ற தியான மறாவுணர்வும் ஈறின்றி எழுந்திரு வாசகமும்
கையிற்றிக ழும்உழ வாரமுடன் கைக்கொண்டு கசிந்து கலந்து"

(திருநாவுக்கரசர் புராணம்-75)

கைத்தொண்டினை எவ்விடத்தும், எஞ்ஞான்றும் கடப்பாடாகச் செய்து போந்தமையின். இதுபற்றியே சேக்கிழார், அந்நாயனரது புராணத்தில் அவரது பெருமையைத் தொகுத்திய முதற்றிருப்பாட்டில், அவரை, "திருந்தோண்டின் நெறிவாழ வருஞானத் தவமுனிவர்" என்றருளிச் செய்தார். பின்னர் அவரது திருவ்வதாரத்தினைக் கூறுமிடத்து, "அருந்தவத்தோர் நெறி வாழ...வந்தவதா ரஞ்செய்தார்" என்றதும் இப்பொருட்டேயாமென்க.

இங்ஙனம் திருத்தொண்டின் நெறிக்குச் சிறந்து நிற்கும் ஆசிரியர் திருநாவுக்கரசராதல் பற்றியே சேக்கிழார், அந்நாயனரது தொடர்பாயுள்ள வரலாற்றுப் பகுதிகளிலே அந்நெறியின் பெருமையைச் சிறப்பாக விளக்குதலை மேற்கொண்டுள்ளார். அப்பகுதிகள் அதற்கு இயற்கையிலே வாய்ப்பாய் விளங்குதலை நாம் அறிந்து இன்புறலாம்.

அத்தகைய இடங்களில் அப்பூதியடிகள் நாயனர் புராணம் மிகச் சிறந்ததோர் இடமாகும். அப்பூதியடிகளார் திருநாவுக்கரசரைக் காணுதமுன்பே அவரிடத்தில் அன்பு பூண்டு அவரையே ஆசிரியராகக்கொண்டொழுகினவர் என்பது அனைவரும் அறிந்தது. 'அவ்வாறு அவருக்கு அவ்வாசிரியரைக் காணுதமுன்பே அவரிடத்து அத்துணை அன்பு நிகழக் காரணம் யாது?' என அறிய விரும்புவார்க்குச் சேக்கிழார், "வடிவுதாம் காணுராயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர் - அடிமையும் தம்பிரானுர் அருளுங்கேட்டு" எனக் காரணங் கூறுகின்றுர்.

பின்னர்த் திருநாவுக்கரசர் அப்பூதி அடிகளார் அமைத்த தண்ணீர் பந்தரை அடைந்து, அதில் எம்மருங்கும் 'திருநாவுக்கரசு' எனும்பேர் எழுதப்பட்டிருத்தலைக் கண்டு, "இதற்கு என்னே கருத்து?" என்று அதனை அறிதல் வேண்டி அப்பூதியடிகளாரது இல்லத்தை அடைந்து, அவர் தம்மை இன்னுர் என்றறிதற்கு முன்பே,

"ஆறணியுஞ் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப் பந்தரில் நும்பேர் எழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல்
கூறும்"

என வினவியபொழுது, அவ்வடாத வினவைக் கேட்டு மனம் வருந்தி அப்பூதியடிகளார்,

" ....நாணில்அமண் பதகருடன்
ஒன்றியமன் னவன்சூழ்ச்சி திருத்தொண்டின் உறைப்பாலே
வென்றவர்தந் திருப்பேரோ வேறொருபேர் ?"

எனவும்,

" நம்மைஉடை யவர்கழற்கீழ் நயந்ததிருத் தொண்டாலே
இம்மையிலும் பிழைப்பதென என்போல்வா ருந்தெளியச்
செம்மைபுரி திருநாவுக் கரசர்திருப் பெயரெழுத
வெம்மைமொழி யான்கேட்க விளம்பினீர் "

எனவும் விடையிறுத்ததாகக் கூறுகின்றார். இவற்றால் நாம் அறிவதென்ன? திருத்தொண்டிற் சிறந்து நிற்கும் நிலையின ராதல் பற்றியே திருநாவுக்கரசர்பால் அப்பூதியடிகளார்க்கு ஆராக் காதல் மீதூர்வதாயிற் றென்பதே. இன்னும், 'சமணர் சார்பால் பல்லவன் திருநாவுக்கரசர்க்குச் செய்த தீங்குகளெல்லாம் அவரைச் சிறிதுஞ் சாராதொழிந்தமைக் குக் காரணம் அவரது திருத்தொண்டின் உறைப்பே' என் பதும், 'அதனுல் திருத்தொண்டு வீடுபேற்றைத் தருதலன்றி இம்மையிற் பகை முதலியவற்றான் வருந்தீங்குகளின்றும் பிழைப்பித்தலையுஞ் செய்யும்' என்பதும் அப்பூதியடிக ளாரது விடையில் அமைந்துகிடக்கின்றன. திருத்தொண் டின் பெருமையும், அதன்கண் உறைத்து நின்ற திருநாவுக் கரசு நாயனரது பெருமையும் இப்பகுதியில் எத்துணை விளக்கமாகத் தெரித்துணர்த்தப்படுகின்றன என்பதை நாம் நன்குணரலாம்.

இனி, திருநாவுக்கரசருக்கு இங்ஙனம் விடையிறுத்த அப்பூதியடிகளார், பின்னர் அவரைத் தாம் இன்னரென அறிதல் வேண்டி, " எங்குறைவீர் ? நீர்தாம் யார் ? இயம் பும் " என வினவியபொழுது, திருநாவுக்கரசர் அடைந்த உணர்வு நிலையையும், உரைத்த உரையின் நிலையையும் சேக்கிழார் கூறுதல் அருமையினும் அருமையாம்.

உள்ளத்தில் வெகுளியும், உடம்பில் அதற்குரிய குறி களும், உரையிற் கடுமையும் தோன்ற, " எங்குறைவீர் ? நீர் தாம் யார்?" என அப்பூதியடிகளார் வினவியபொழுது,

திருநாவுக்கரசர், ' இவ்வாறு வெகுண்டு நிற்கும் இவர் நாம் இன்னார் என்பதை யறியின், பின்னர் எங்நிலையினராவர் !' என எண்ணி உள்ளத்திற் சிறிது நகையும், உரையிற் சிறிது பெருமிதமும் தோன்றத் தாம் இன்னார் என்பதனை வெளிப் படுத்துதல் அன்றோ இயற்கையில் நிகழற்பாலது? ஆயினும், நாவுக்கரசர் அங்ஙனம் செய்தனரா ? எனின் ' இல்லை ' என்கின்றார் சேக்கிழார். " திருநாவுக்கரசர் அவர் பெருமை யறிந்து (அப்பூதியடிகளாரது பெருமையறிந்து) உரை செய்வார் " என்றே அவர் கூறுகின்றார். அஃதாவது, உண்மையறியாது வெகுண்டமை பற்றி நாணற்பாலார் அப்பூதியடிகளாரென நினைக்கற்பாலரராய திருநாவுக்கர சர், அவ்வாறின்றி, அப்பூதியடிகளாரது பெருமையை யறியாது, "வேறொரு பேர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல் ?" எனத் தாம் வினவினமை பற்றித் தாம் வருந்தினார் எனவே கூறுகின்றார் என்ப.

அங்ஙனம் திருநாவுக்கரசர் வருந்துமாறு அவரால் முன்னர் அறியப்படாது பின்னர் அறியப்பட்ட அப்பூதி யடிகளாரது பெருமை யாது ? திருத்தொண்டின்மீது அப்பூதியடிகளார்க்கு இருந்தஅளவிலா ஆர்வமே திருநாவுக் கரசரால் அறியப்பட்டதென்க.

திருநாவுக்கரசர் அப்பூதியடிகளாரது தண்ணீர்ப் பந்தரை அடைந்து, அதில் ' திருநாவுக்கரசு ' என்ற பெயர் எழுதப்பட்டிருந்ததைக் கண்டபொழுது, ' சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்களுக்குச் சென்று வழிபட விரும்பும் அடியார்கள் பொருட்டு ஒரு பெரியரால் வைக்கப்பட்டுள்ள இத்தண்ணீர்ப் பந்தருக்கு இப்பெயரை இடுவானேன் ? சிவனடியார்கள் பொருட்டு வைக்கப் பட்ட இதற்குச் சிவனடியார் ஒருவர் பெயரை இடுதலே தக்கது என அவர் கருதினராயின், அதற்கு எனது பெயரையோ இட்டிருப்பார் ; எத்துணையோ பழவடியார் கள் உளர் ; அவர்களில் ஒருவர் பெயரையன்றோ அவர் இடுவார் ? அன்றி, ' நாவுக்கரசு ' என்பது எனக்கு இறை வனால் அருளப்பெற்ற நன்மைமாயினும், அப்பெயருடைய அடியார் பிறர் யாரேனும் உளரோ ? உளராயின், இத் துணைப் பேரறங்களைச் செய்யும் பெரியாரது வழிபாட்டிற் குரிய அவ்வடியவரை யாயினும் கண்டு வணங்குதல்

வேண்டுமன்றோ?' என்றெல்லாம் எண்ணி, ஒன்றும் தோன்ருது அப்பூதியடிகளாரையே அடைந்து வினவினர். அங்ஙனம் வினவியகாலத்து அப்பூதியடிகளார் கூறிய விடைகளால் அவர்க்குத் திருத்தொண்டின்மீதுள்ள ஆர்வம் புலனயிற்று.

அஃதாவது, 'திருத்தொண்டின்பால் இவருக்குள்ள அளவிலா ஆர்வமே இவரை எனது சிறுமையை மறக்குமாறு செய்தது. யானே இவர்போலத் திருத்தொண்டின் பெருமையை ஒருதலையாக உணர்ந்துநிற்கும் பேறில்லாது, இருமுதுகுரவரும், புலன்கொளுவ மனமுகிழ்த்த சுருள் நீக்கி மலர்விக்கும் கலைகளைப் பயில்வித்த நல்லாசிரியர்களும், தூண்டுதவ விளக்கனையராகிய தமக்கையாரும் காட்டிய திருத்தொண்டின் வழியை வழியென்றுணராது குழியென இகழ்ந்து, பாழ்ங்கொள்கைப் படுநெறியாகிய குழியை வழியென வீழ்ந்து, மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான் தாள்தொழாதே உய்யலாம் என்றெண்ணி உறிதூக்கி உழிதந்து, கனியினுங் கட்டிபட்ட கரும்பினும் இனியனாகிய இறைவனை விடுத்துக் கன்மத்துக் காட்பட்டு, பாலனைக் கழிந்த நாளும், பனிமலர்க் குழலார் தங்கள் மேலனைக் கழிந்த நாளும் போக, மெலிவோடு மூப்புவந்து கோலனைக் கழிகின்ற நாளினும் குறிக்கோளிலாது கெட்டலையும் நாளில், எனது தமக்கையார் தன்னைப் பன்னாள் பணிந்து குறையிரக்க, அக்குறையினை முடியாதொழிதல் வேண்டுவோர் வேண்டுவதே ஈவானாகிய தனக்கு ஏலாமையின், எம்பெருமான், அவர்க்கு "உன்னுடைய மனக் கவலை ஒழிநீ' என்றருளிச் செய்து, கடற்றினுங் கொடிய சூலையை எனக்களித்துப் பறித்துப் புரட்டி அறுத்து ஈர்த்திட அதன்பின்னரே உண்மையுணர்வு வரப்பெற்றுத் திருத்தொண்டின் நெறியைத் தமக்கையார் அருளப்பெற்று உய்தியை அடைந்து, சின்னாட்களாகவே தொண்டனாய்த் திரியும் எனது சிறுமை உலகறிந்த தொன்ருகவும் அதனை இவர் மறந்து, முன்பெலாம் இளையகாலம் மூர்த்தியை நினையா தொழிந்மையால், பின்பகல் உணங்கல் அட்டும் பேதைமார்போலக் கிடைத்த இச்சிறுபொழுதிலேனும் இவ்வாக்கையாற் பயன்கொள்ளக் கருதி யான் செய்துவரும் சிறுதொண்டினையே உறைப்புடைய பெருந்தொண்டாக

வும், குறைந்தடைந்தார் ஆழாமைக் காப்போனாகிய நம் பெருமான் அவ்வியல்பிற்றாய தனது கருணைத் திறத்தினால், அமணர்கள் செய்த தீங்குகளினின்றும் என்னைப் பிழைப்பித்த அருட்செயல்களை எனது திருத்தொண்டின் உறைப்பிற்கு அவன் செயற்பாலனவாய் நின்ற செயல்களாகவும் இவர்கொண்டு தமது தண்ணீர்ப் பந்தர்க்கு எனது பெயரையே இட்டார்; என்னே இவரது திருத்தொண்டின் ஆர்வம்!' என நினைந்தார் திருநாவுக்கரசர் என்க.

இவ்வாறு நினைந்த நாவுக்கரசர் பின்னர் அப்பூதியடிகளார் வினவிய வினாவிற்கு விடைகூறித் தம்மை அறிவிக்க எண்ணும்பொழுது, 'இங்ஙனம் திருத்தொண்டின்மேலுள்ள ஆர்வ மிகுதியால் எனது சிறுமையை மறந்து நிற்கும் இவருக்கு அதனை நினைப்பித்தலே எனக்குக் கடனாவ' தென்று கொண்டு, "பிற துறையினின்றேற—அருளு பெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த—தெருளு முணர்வில்லாத சிறுமையேன் யான்" எனக் கூறியருளினார் என்க. இத்தகையோராய நமது ஆளுடைய அரசுகளையன்றி உள்ளத்தானும் உயர்ந்த உண்மைப் பெரியாராக நாம் யாரைக் கருதுதல்கூடும்! ஆளுடைய அரசுகள் அப்பூதியடிகளாரது சந்திப்பாகிய இதுபோல வேறொரு பெரியார்கள் சந்திப்பினை எங்கு நாம் காண்டல் கூடும்!

இனி, அப்புராணத்தில், அரவு தீண்டி இறந்த அப்பூதியடிகளாரது மூத்தமகனைத் திருநாவுக்கரசர் திருப்பதிகம் பாடி உயிர்பெற்றெழச் செய்த அற்புதத்தினை விளக்குமிடத்துச் சேக்கிழார், "பிறிவுறும் ஆவி பெற்ற பிள்ளையைக் காண்பார் தொண்டின்—நெறியினைப் போற்றி வாழ்ந்தார்" எனக் குறிக்கின்றார். இதனுள்ளும் திருத்தொண்டின் பெருமையே வலியுறுத்தப்படுகின்றது. திருநாவுக்கரசர் நம்மை உடையவர் கழற்கீழ் நயந்த திருத்தொண்டாலே இம்மையிலும் பிழைப்பதென்பதனை எளியோரும் உணருமாறு செம்மை புரிவார்தலை உணர்ந்து அவர்மீது ஆராக் காதல்கொண்ட அப்பூதியடிகளார்தம் இல்லநிற்றானே அத்தகையதோர் அதியற்புதச் செயலை உலக நலத்தின் பொருட்டு இறைவன் நிகழ்த்துவித்தான் என்பது இப்பகுதியிற் குறிப்பாற்கொள்ளக் கிடக்கின்றது. இங்ஙனம்

அப்பூதியடிகள் புராணம் முழுதும் திருத்தொண்டின் நெறிப் பெருமையே இனிது விளங்கிக் கிடத்தல் காண்க.

இனி, திருத்தொண்டின் பெருமையை உணர்ந்து அதன் பயனைத் திருநாவுக்கரசரையே தமக்கு அருளாசிரியராகக் கொண்டொழுகிய அப்பூதியடிகளார் அதனாற் பெற்ற பயன் யாது என்பதனை ஒரு சிறிது நோக்குதலும் ஈண்டு இன்றியமையாததேயாம்.

திருநாவுக்கரசர் அப்பூதியடிகளாரது இல்லத்தில் எழுந்தருளிக் "காதல்நண் பளித்துப் பன்னாள் கலந்துடனிருந்த பின்றை"த் திருப்பழனம் சென்று ஆங்குள்ள இறைவனைப் பணிந்து பாடிய, "சொன்மாலை பயில்கின்ற" என்னுந் திருப்பதிகத்தின் முடிவில், "அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி—குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே" என அப்பூதியடிகளாரைச் சிறப்பித்துப் பாடியருளினர். அங்ஙனம் பாடப்பெற்ற வதனையே அப்பூதியடிகளார் அடைந்த பயனைச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

"அப்பூதி யடிகளார்தம் அடிமையைச் சிறப்பித் தான்ற
மெய்ப்பூதி யறிந்தார் தம்மை விரும்புசொன் மாலை வேய்ந்த
இப்பூதி பெற்ற நல்லோர் எல்லையில் அன்பால் என்றும்
செப்பூதி யங்கைக் கொண்டார் திருநாவுக் கரசர் பாதம்"

என்பது அத்திருப்பாட்டு.

அப்பூதியடிகளாரது அரும்பெருஞ் செயற்கு மேற்காட்டிய அரைப்பாடல்தானோ பயன்? எனச் சிலர் வினவலாம். இறைவனையன்றி எவ்வாற்றானும் பிறரைப் பாடவறியாத நாயன்மார்களது திருப்பாடலில் ஒருவர் குறிக்கொண்டு பாடப்பெறுவராயின், அவர்க்கு அதனினுஞ் சிறந்த பேறு யாதுளது? என்பதை அவர்கள் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

அன்றியும், நாயன்மார்களது திருப்பாடல்களில் புகழ்தல் வகையால் இடம்பெற்ற உயிர்கள் யாவும் மலம் நீங்கிச் சிவஞானம் பெற்றுச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வடையும் என்பது, "குரும்பை ஆண்பனை ஈன்குலை ஓத்தூர்" எனத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் குறிக்கொண்டு சிறப்பிக்கப் பெற்றமையால், திருவோத்தூரில் இருந்த

ஆண்பனைகளெல்லாம் பாசத்தின் நீங்கிச் சிவமாந் தன்மையை எய்தின எனச் சேக்கிழார் அருளியவாற்ருன் அறிகின்றேம். அதனல், திருநாவுக்கரசு நாயனர், இறைவனை, 'அப்பூதி அடிகளாரது குஞ்சிப் பூவாய் நின்ற சேவடியான்' எனக் குறித்தருளியதனல், இறைவன் சேவடி அப்பூதியடிகளாரது சென்னியினின்றும் எக்காரணத்தானும் நீங்காது மலர்ந்திருத்தல் ஒருதலே. அருளாசிரியர் தம்மை அடைந்த அதிதீவிர பக்குவர்க்குச் செயற்பாலது, அவரை இறைவன் திருவடி நிழற்கீழ் ஆக்குதலேயன்றே! அதனையே அதுபோது அப்பர்பெருமானர் அப்பூதியடிகளார்க்குச் செய்தருளினர். ஆகவே, "அப்பூதி குஞ்சிப் பூவாய் நின்ற சேவடியாய்" என்றருளிச் செய்த அப்பர் திருமொழியின் வலத்தால் அப்பூதியடிகளார் திருவடி ஞானம் சலியாதுறப்பெற்று அன்றே பரமுத்தி நிலையைப் பெற்றவராயினர் என்க. திருநாவுக்கரசரது திருவருட் பாடலின் பயன் இதுவாகுமாயின், அதனை அடையப் பெற்ற அப்பூதியடிகளாரைச் சேக்கிழார், "திருநாவுக்கரசர் பாதம் எல்லையில் அன்பால் என்றும் செப்பு ஊதியம் கைக்கொண்டார்" எனக் கூறியதில் மிகையாதுளது'

திருத்தொண்டின் நெறிப் பெருமை இங்ஙனம் அளத்தற்கரிதாய் உள்ளது. ஆயினும், அதனை உணர்வோர் எத்துணையர்? உணர்ந்த பின்னர் அந்நெறி நின்று பயன் கொள்ள வல்லோர் எத்துணையர்? அவற்றை ஆண்டவனே அறியற்பாலான். அவனருள் அனைவர்க்குந் துணைசெய்வதாக. நலம்.

காரி நாயனர் வரலாறு

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார்

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர் காரி நாயனர். இவருடைய திரு நக்ஷத்திரம் மாசிப் பூராடம். திருத்தொண்டத் தொகையுள் எட்டாவது பாசுரத்தில் "கறைக் கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த கணம் புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்" என்று இவர் குறிக்கப் பெறுகிறர். நம்பியாண்டார் நம்பிகள்

அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியில் " புல்லனவாகா வகையுலகத்துப் புணர்ந்தனவும் சொல்லினவும் நயமாக்கிச் சுடர் பொற் குவடுதனி வில்லனை வாழ்த்தி விளங்கும் கயிலை புக்கான் என்பரால் கல்லன மாமதிள்சூழ் கடவூரி னில் காரியையே " என்று இவருடைய வரலாறு காணப் படுகிறது. சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்த திருத் தொண்டர் புராணத்தில் (பெரிய புராணத்தில்) கறைக் கண்டன் சருக்கத்தில் இவருடைய புராணம் ஐந்து பாடல் களால் விவரிக்கப் பெற்றுள்ளது.

" *மறையாளர் திருக்கடவூர் வந்துதித்து வண்தமிழின்*
துறையானபயன் தெரிந்து சொல்விளங்கிப் பொருள்மறையக்
குறையாத தமிழ்க்கோவை தம்பெயரால் குலவும்வகை
முறையாலே தொகுத்தமைத்து மூவேந்தர்பால் பயில்வார் "

என்பது முதற்பாடல். இதிலிருந்து இவர் திருக்கடவூரில் அவதரித்து, சிறந்த தமிழ் வித்வானுகித், தமது பெயரால் ஒரு கோவைப் பிரபந்தம் இயற்றி, முடிவேந்தர் மூவரிட மும் நண்பராக அளவளாவினுர் என்றறியலாம். அடுத்த பாடலில் " மன்னவர்பால் பெற்றநிதிக்குவைகொண்டு சங்க ரனுர் இனிதமரும் தானங்கள் பலசமைத்தார் " எனவரும் குறிப்பிலிருந்து, இவர் மூவேந்தர்கள் தந்த பெரும் பொருள் கொண்டு, சிவாலயங்கள் பலவற்றைக் கட்டித் திருப்பணி செய்தார் எனத் தெரிய வரும். மூன்ருவது பாடலில், " சிரடியார் எல்லார்க்கும் மேவுற்ற இரு நிதியம் மிக அளித்து " என வருவதிலிருந்து, இவர் தமக்குக் கிடைத்த பொருள் கொண்டு சிவனடியார்கட்கு நிரம்பப் பொருள் கொடுத்தார் என்பது துலங்கும். நான்காவது பாடலில் இவர் தமது " இசை நிறுத்தி......ஆய்ந்த உணர் விடையரு அன்பினராய்......சிவபெருமான் அருள்பெற்ற தொடர்பி ஞல் வாய்ந்த மனம்போல் உடம்பும் வடகயிலை மலைசேர்ந் தார் " என்ற செய்திகளைக் காணலாம். அடுத்த பாடலில் இவரை வணங்கி, நின்றசீர் நெடுமாறர் திருத் தொண்டு செப்புவாம் என முடிக்கிருர் சேக்கிழார். திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, பெரியபுராணம் ஆகிய மூன்றிலும் இவருடைய மரபு குறிக்கப் படவில்லை. " மறையாளர் திருக்கடவூர் " என்ற பாட்டில், மறையாளர்

என்னும் சொல்லைக் கடவூருக்குச் சிறந்த அடை மொழி யாகவே உரையாசிரியர்கள் கொண்டுள்ளனர். திருத் தொண்டர்புராண வரலாற்றுள் இவர் மரபறியாதவர் அறுவருள் ஒருவராகவே எண்ணப்படுகிறார்.

உமாபதிசிவனார் இயற்றியதாகக் கூறப்படும் "திருத் தொண்டர்புராண சாரம்" எனும் நூலில், "திருக்கடவூர் வரும் உரவோர் காரியாராம் திருத்தொண்டர் வண்தமிழ் நூல் திருந்த ஓதி, விருப்பொடுதம் பெயரால் பா விளம்பி மும்மை வேந்தரையும் முறைமுறையே மேவி அங்கண், உரைத்த உரை நயமாக்கி அவர்பால் ஏய்ந்த ஒண் பொருளால் ஆலயங்கள் ஓங்கச்செய்து, தரைக்கண் அருந் தவர்க் கேவல் தகமுன் போற்றும் தன்மையால் அருள் சேர்ந்த நன்மையாரே" எனும் பாடல் இவருடைய புராணத்தின் சாரமாகவுள்ளது. ஈண்டும் இவருடைய மரபு கூறப்படவில்லை.

இவருடைய வரலாற்றிலிருந்து நாம் மூக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டிய உண்மைகள் சில உள்ளன. தமிழ்க் கல்வியிற் சிறந்து பெரிய வித்துவானாக வேண்டும். நிரம்பப் பொருள் சேகரிக்க வேண்டும். அப்பொருளைத் தமக்கென்றே ஒதுக்கிவிடாமல் ஆலயப்பணிக்கும் அன்பர் பணிக்கும் பயன் படுத்த வேண்டும். பருவுடலோடு திருக் கயிலாய பதவி பெறுதற்குரிய சமயவுணர்ச்சியும் பழுத்த உள்ளமும் இறையருளாலும் நமது முயற்சியாலும் ஒழுக் கத்தாலும் பெறுதல் வேண்டும். சிறந்த சமயத்தொண்டர் எண்ணிக்கையில் இடம்பெற வேண்டும்.

காரி என்ற பெயருடைய பெரியார்கள் பலர் நம்தமிழ் நாட்டில் பல நூற்றாண்டுகளில் வாழ்ந்தனர். நம்மாழ்வார் தந்தையார் பெயர் காரி. பழையனூரில் வாழ்ந்து, ஔவை யாரை உபசரித்து, அவ்வம்மையால்,

> "பாரிபரிந்த பரியும் பழையனூர்க்
> காரிகொடுத்த களைகட்டும்"

என்று பாரிவள்ளலோடு வைத்தெண்ணப் பெற்ற காரி ஒருவர். பாண்டியன் பல்யாகசாலை முது குடுமிப் பெரு வழுதியைப் புறநானூற்றில் பாடிய காரிகிழார் ஒருவர். சிறுபஞ்ச மூலம் (எனும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்

ஒன்றைப்) பாடிய காரியாசான் எனும் ஜைனசமயப் புலவர் ஒருவர். புகார் நகரில் வாழ்ந்த காரிக் கண்ணனுர் எனும் சங்கப்புலவர் ஒருவர். திருக்கோவலூரிலும் முள்ளூர் மலையிலும் வாழ்ந்த இடையர்குலத் தோன்றல் காரி வள்ளல் ஒருவர். பாண்டிநாட்டுக் கொற்கையில் ஒரு புத்தன் மகனுய்த் தோன்றி "கணக்கதிகாரம்" இயற்றிய காரி நாயனுர் ஒருவர். அகபாயன் காலத்திலிருந்தவர் ஒருபெரியார். இரட்டைப்புலவர்களைப் போல் காரியார் நாரியார் எனும் இருவர் மதுரைக்குச் செல்லும் வழியறியாது திகைக்க, ஆலவாய்ப்பரமனுல் வழிகாட்டப் பெற்றவர்களுள் ஒருவர்.

திருக்காரிகரை எனும் சிவஸ்தலம் சுந்தரர் தேவாரத்திலும் பெரியபுராணத்திலும் குறிக்கப்படுகிறது. இது தற்போது ராமகிரி எனப் பெயர் பெற்றுள்ளது. சென்னையிலிருந்து நாகலாபுரத்திற்கு மோட்டார் பஸ் மூலம் சென்று மேலும் இரண்டு மைல்சென்ருல் இத்தலத்தையடையலாம். எட்டுக் கைகளையுடைய வைரவர் சந்நிதி மிகப் பிரசித்தம்—மிகப் பழைய கோயில். பக்கத்தில் காரியாறு ஓடுகிறது. சோழ நாட்டிலும் ஒரு காரியாறுண்டு.

காரி நாயனுர் திருவடிகள் வாழ்க. வாழ்க சீரடியாரெல்லாம்!

இன்றைய சமயப் பணி

(வித்துவான் திரு. அ. நடேச முதலியார்)

பெரியோர்களே! அறிஞர்களே! அன்பர்களே!

இன்றைய நிலை: உலகம் விரிந்தது, பலமொழி, சமயங்கள் பல, சமுதாயம் வேறுவேறு. நாகரிகம் பலதிறத்தன. பலவித இனப் பாகுபாடுகள். இத்தனையும் நிறைந்து காணப்படுவது இன்றைய உலகம். ஆயினும், ஒரு நாட்டினரை, ஒரு மொழியினரை, ஒரு நாகரிக நிலையை, மற்ருெரு சமயத்தை, வேறு சமூகத்தினரைச் சில நூறுண்டுகட்குமுன் அறியமுடியாததுபோல இன்று இல்லை. இன்று, அவர்களோடு கூடி வாழவேண்டியவர்களாயும், அவர்களை அறிந்து வாழவேண்டியவர்களாயும், அவர்களோடு ஒத்து வாழவேண்டியவர்களாயும் இன்றைய நிலையில் உள்ளோம்.

காலமும், முன்னேற்றமும், விஞ்ஞானத்துறையும், அரசியல் நிலையும், நம்மைப் பிறரோடு ஒன்றுகூடி, அறிந்து, ஒத்து வாழும்படி இன்றைக்குச் செய்துள்ளன. இந்நிலையைத் தடுக்கமுடியாது. தடுக்கவும் கூடாது. ஏனெனில், உலகம், ஐந்து கண்டமாய், பல்லாயிரம் மைல்கள் விரிந்து பன்னூறு கோடி மக்களைப் பெற்றிருப்பினும், விஞ்ஞானம், உலகத்தைச் சுருக்கி, நம்மைப் பிறர் நேரில் அறியவும், பிறரை நாம் நேரில் அறியவும் கூடிப் பழகவும் வாய்ப்பினை அளித்துள்ளது. இத்தகைய பெருமித நிலையில் வாழும் இன்றைக்குச் சமுதாய நிலையில் காணப்படும் வேற்றுமைக்கும், முன்னேற்றத்துக்கும், ஏற்றவகையில், சமய நிலையிலும், பண்டைய நிலையிலேயே இல்லாமல், காலத்துக்கு ஏற்றவகையில் மாற்றமும், முன்னேற்றமும் பெறவேண்டுவது இன்றியமையாததுதானா ? என்பதைச் சிந்திக்க வைக்கவும், அதற்கு என்ன செய்யவேண்டும் என்பதை எண்ண வைப்பதுமே இந்தச் சிறு பேச்சின் நோக்கமாகும்.

தமிழர் சமயம் : தமிழராகிய நாம் பாரதநாட்டின் தென்கோடியில் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு வாழும் ஒரு சிறு கூட்டத்தினராய்ச் சில கோடி மக்களாய் இருநூறு கோடி மக்களுக்கு மேற்பட்ட உலக அரங்கில் காட்சியளிக்கிறோம்.

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' என்று பல்லாயிரம் ஆண்டுகட்குமுன்னர்க் கூறிய எல்லையில், வடவேங்கடம் தமிழ்நாட்டின் எல்லையில்லாமல் இன்றைய அரசியலும் சமுதாய நிலையும் செய்துவிட்டது. நல்லுலகம் என்ற பனம்பாரனார் எண்ணம், தமிழ்நாட்டைச்சார்ந்த பிறமொழி பேசும் நாட்டினர் அன்று தமிழ்நாட்டையும், மொழியையும், பெருமையோடு போற்றி வந்தமையைக் குறிப்பிட்டதாகும். பட்டினப் பாலையில் உருத்திரங்கண்ணனார், காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பிக்கும்போது பல மொழியினரும், பல நாட்டினரும் நெருங்கி, உறவாடி வணிகம், கலை, நாகரிகம் பெற வாழ்ந்தநிலையினைக் கூறியபடி இன்று தமிழ்நாட்டை நாம் காணமுடியவில்லை. இன்றைக்கு நாம், மொழியாராய்ச்சி, கலையாராய்ச்சி, வணிக முன்னேற்றம் பிறதுறை வளர்ச்சிக்குப் பிற நாடு சென்று பயிலவேண்டிய நிலையில்

உள்ளோம். காரணம், நம் முன்னோர் அரசியலை யிழந்து, பிறர்க்கு அடிமைப்பட்டதின் விளைவு. எனினும், இன்று என்றும் குன்ற இளமைத் திறனோடு விளங்கும் நம் தமிழும், நம் பண்டைய நாகரிக உயர்வினை எடுத்துக் காட்டும் இலக்கியங்களும், நம் முன்னோர் இந்தச் சூழ்நிலையிலும் பாது காத்துவைத்துள்ள கலைக்கூடங்களாய் விளங்கும் திருக்கோயில்களும், அவற்றிற்கு உறுதுணையாய் மூலமாய் உள்ள சமயமும் உள்ளன. இங்கேநாம் எடுத்துக்கொள்வது சமயம். சமயத்தை நம் முன்னோர் எங்ஙனம் கொண்டனர் என்பதைப் பற்றிப் பலவிதக் கருத்து வேற்றுமைகள் உண்டு. ஆனால், ஒரு மனிதனுக்கு இன்றியமையாத மூவகை நிலை உள்ளன. அவற்றை உடல் வாழ்வு, அறிவு வாழ்வு, ஆன்ம வாழ்வு எனக் கொள்ளலாம்.

உடல் வாழ்வு: காவிரி, தென்பெண்ணை, பாலாறு, தமிழ்கண்ட வையை, பொருநை யாற்றால் திருமேனி செழித்த தமிழ்நாட்டில் பண்டுசெய் தவப்பயனால் பிறவி எடுத்துள்ளோம். பிறவி என்பது, ஆன்மா கருவி கரணங்களோடு கூடி, உடல்வாழ்வை ஊழ்வினைக்கேற்ப எடுப்பது என்பது சமய அறிவுடைய அனைவரும் அறிந்தது. உயிர் அழிவதில்லை, நிலைத்தது. அது, தான் செய்த கருமத்துக் கேற்பக் கறங்கும் சகடமும்போல் உடலோடு சுழல்வதையே பிறவி என்று கூறுகிறோம். அப்பிறவியைத் தமிழ் நாட்டில் பெற்றுள்ளோம் நாம். இது நல்வினைப் பயனே. இந்த உடல், இத் தமிழ்நாட்டில் ஓடும் நீரையும், உணவையும் உண்டு வளர்கிறது. ஆகையால், இந்நாடு நமக்குச் சொந்தம். இந்நாட்டுக்கு இப்பிறவியில் நம் கடமையைச் செய்யவேண்டும். இந்நாட்டின் உயர்வு, இந்நாட்டு மக்களின் நல்வாழ்வு இந்நாட்டு மொழியின் வளர்ச்சி, நமக்குரிய உயர்வு, வாழ்வு வளர்ச்சியாகும். ஆகையால் உடல் வாழ்வைப் பொறுத்தவகையில், நாட்டுப்பற்று இன்றியமையாதது என்று கொள்கிறோம்.

அறிவு வாழ்க்கை: இந்த உடலோம்பி வாழ்வு வளர்வது அறிவு வளம்பெறவே. மக்கள் வாழ்க்கையின் சிறப்பே அறிவினால்தான் அமைகிறது என்பது அனைவரும் அறிந்த உண்மை. அறிவு என்பது தீயது விலக்கி நல்லதில் வாழ்க்கையைப் புகுத்துவது என்பது வள்ளுவர் கூறும்

உண்மை. 'சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ நன்றின்பா லுய்ப்பது அறிவு' என்பது பொய்யாமொழி. அங்ஙனம், நல்லதின் நன்மையும், தீயதின் தீமையும், பகுத்துணரும் நல்லறிவு தலைப்படுவதற்கு இன்றியமையாதது மொழியே. மொழிதான், அறிவை விளங்கச் செய்கிறது மொழி எண்ணங்களாய் உருவெடுத்து நன்மை தீமைகளை உணரும் படிச் செய்கிறது என்ற உண்மையை, அறிவு நூலார் கூறும் முடிவுகளிலிருந்து உணரலாம். அவ்வறிவு, நுண் ணறிவு என்றும், நூலறிவு என்றும் இருதிறப்படும். நுண் ணறிவு, மனிதனிடத்தில் இயல்பாகவே அமைந்துகிடப்பது. நூலறிவு, அந்நுண்ணறிவைத் தூண்டி, விளங்கவைப்பது. 'மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்—யாவுள முன்நிற்பவை' என்ற திருக்குறள் இதனை உண்மையாக்கும். அங்ஙனம் நல்லறிவுசான்ற முதுமக்கள் நமக்களித்த அவர்களனுபவமாகிய நூலறிவுகொண்டு, நம் நுண் ணறிவை வளர்த்துக்கொள்வதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது மொழி என்பதை நாமறியவேண்டும். அம்மொழி இயல்பாகவே இனிமையும் தொன்மையும் உடைய தமிழை நாம் தாய்மொழியாகப் பெற்றுளோம். எனவே, அத்தாய்த் தமிழ் உயிர் எனப் போற்றற்குரிய தாகும். அதனால் மொழிப்பற்று, எந்நாட்டிற் பிறந்தவர்க் கும் அந்நாட்டு மொழி உயிரெனவே தரும் முறையால் இயல்பாகவே உண்டாகற்பாலது. அதனைக் கடைப்பிடித்து அம்மொழி வளர்ச்சியிலும், அதன் உயர்விலும் நமக்குப் பங்குண்டு.

சமயப் பற்று: இத்தனை நாட்டுப்பற்றும் மொழிப்பற் றும் இவ்வுடலோடு கூடி, அறிவு வாழ்க்கை வளம்பெற நடத்தி இன்பமடையக் கருதும் உயிர் வளர்ச்சிக்கேயாம். எனவே உயிரின் உண்மையான வளர்ச்சியே அதன் ஆக்கமே, அதன் விடுதலையே பிறவியின் நோக்கம். ஆகை யால், உயிர் வாழ்வுக்குரிய சமய எண்ணம் இன்றியமையா தது என்ற முடிவுக்கு வருகிறோம். மனிதப் பிறவி உண்டு உடுத்துப் பேசி மரணமடைந்து அழிந்துபோகும் ஒரு மயக்கநிலையில் உள்ளதா? அன்றி அது மரணத்துக்குப்பின் ஏதாவது ஒரு நிலைமை அடையக்கூடிய பெருநிலை உடையதா? என்பதைப் பற்றிச் சிந்திக்கவைப்பதே சமய உணர்வாகும். தன்னைப் பற்றியும் தான்

வாழ்கிற வாழ்வில் நிகழும் இன்பதுன்ப நிகழ்ச்சிகளைப் பற்றியும், இவற்றின் காரணங்களைப் பற்றியும் நீண்டு சிந்திப்பதற்கு வழி செய்வது சமயமே ஆகும். நம்முடைய முன்னோர் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இந்த எண்ணங்களை வளர்த்து, உலகநிலை, உயிர்நிலை, இவ்வுயிர், இவ்வுலக வாழ்வில் வந்ததற்குரிய காரணம், இவ்வுலக நிலை கழன்றால் உயிர் பெறும் சிறப்பு இவற்றை உள்ளவாறு அனுபவத்தால் உணர்ந்து நமக்கு அருளியுள்ளனர். அவைதாம் இன்று சமயம் என்ற பெயரோடு காட்சியளிக்கிறது. பண்டைக்காலத்து நல்லோர்களுடைய வாழ்க்கை யனுபவங்களாக உள்ளவையே பிற்காலத்து மக்கள் சமூகத்துக்கு நல்வழியாக அமைவதும் இலக்கியங்களாக மிளிர்வதும், நாமறிந்த உண்மைகள். அதுபோல பண்டைய உயிர்வாழ்க்கையில் தலைப்பட்ட சான்றோர்களின் அனுபவங்களே, இன்றைய சமூகத்துக்குச் சமய நூல்களாக, இலக்கியங்களாகக் காட்சியளிக்கின்றன. இந்த உண்மை உணரப்படுமானால் சமயம் என்பது, கடவுளால் கொடுக்கப்பட்ட ஒரு வரப்பிரசாதம் என்ற தவறு எண்ணம் குறையும்.

அனைத்துயிர்க்கும் அருள் சுரக்கும் ஒரு முழுமுதலே சமயத்தைப் படைத்துக் கொடுப்பதாயின் பல சமயக் கூறுகள் உண்டாகா. ஒன்றேயாய் இருக்கும். அப்போது உயிர்களின் முயற்சி வேண்டப்படுவதும் இல்லை. பகலவன் ஒளியும், காற்றும் நீரும் எங்ஙனம் எல்லா உயிர்கட்கும் பொதுவாய் வேண்டப்படுவதாயினவோ, அங்ஙனமே, சமயமும் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாய் விளங்கும். அங்ஙனமின்றிப் பல நாடுகளில், பல காலங்களில், பலவிதமான சமயங்கள் தோன்றவும், அவை சமுதாயத்துக்குத் தக்கவாறு பலதுறைகளில் பயன்படவும் வளரவும் வேண்டிய காரணம் என்ன? அங்கங்குத் தோன்றிய அனுபவம் நிறைந்த ஆன்ம வாழ்வில் தலைப்பட்ட சான்றோர் கண்ட முடிவுகளே அங்கங்குச் சமயமாய் மிளிர்கின்றன என்ற உண்மை நமக்கு விளங்குகிறது.

புத்தர் கண்ட சமயம் பௌத்தம் எனவும், கிருத்து கண்ட சமயம் கிருத்துவம் எனவும், மகம்மது கண்ட சமயம், மகம்மதியம் எனவும் வழங்கப்படுவதையும் காண்கிறோம். நம்மனோர் அங்ஙனமன்றித் தாம் கண்ட முடிவு

களை அனுபவங்களை அவ்வனுபவப்பொருள் மேலேயே வைத்து, உயிரின் இன்ப வாழ்வுக்குரிய வழியை அவ்வின் பப்பொருள்மேற் கூறி இன்பத்தை அடையும் வழி சைவம் எனக் கூறினர். இவ்வுண்மை முடிவுகளைக் கண்ட சான்றோரின் காலம்• அறியமுடியாமையாலும் அவர்கள் யார் என்று கூற முடியாமையாலும், காலங்கடந்த பழந்தமிழ்ச் சமயமாய் சைவம் இன்றும் விளங்குகிறது என்பதுவே உண்மை.

இந்நிலையில் உண்மையாய் விளங்கும் சமயத்தைப் பெற்றுள்ளோம் நாம் என்று பெருமைபட நமக்கு உரிமை யுண்டு. அச்சமயம் மூன்று நிலையில் விரிந்துள்ளது. ஒன்று, சாத்திரம், இரண்டு தோத்திரம், மூன்று சரித்திரம் என்பன.

1. சாத்திரம்: பொருள் உண்மையை விளக்கு வதற்கு அறிவுத் துணைகொண்டு ஆராய்ந்து முடிவுகட்டும் நூல்கள். அவை தர்க்கம் முதலாய, நுண்ணறிவும், பல சமய ஆராய்ச்சியும் உடையார்க்கு, ஐயம், அறியாமை, வேறுபாடு இவைகளைப் போக்கும். தெளிவை உண்டுபண் ணும் பொருளை உண்டு என்று உறுதிப்படுத்தும் இக்காலத் துப் பகுத்தறிவுவாதிகட்கும், உண்டோ இல்லையோ என்று ஐயமுறும் சந்தேகத்தினர்க்கும், மிகமிகப் பயன்படும். இந் நூல்களின் அறிவைப் பெற இலக்கிய இலக்கணத்துறை போனபின், சமய நூல்களின் அடிப்படை உணர்ந்து பின் நல்லாசான் வழிநின்று பயிலவேண்டி யிருக்கிறது.

2. தோத்திரம்: இதனைப் பக்திப் பனுவல்கள் என்று கூறலாம். இவை, ஆன்ம வாழ்வில் அனுபவங்கண்ட நல் லோர்கள், அம் முழுமுதற்பொருளை முன்னிலைப்படுத்தித் தம் இழிவு நிலையையும், அப்பொருளின் பெருநிலையையும் உணர்ந்து, அப்பொருள் தமக்களித்த அருள்திறத்தை நினைந்து நினைந்து உருகி உருகிப் பாடியன. ஆன்ம வாழ்வில் தலைப்படுவோர், உலக நிலையாமை உணர்ந்து செம்பொருள் வழி நிற்போர், பொருளுண்டு என்று சித்தம் தெளிந்த நல்லோர், அப்பொருளை நேசித்தற்கு அப்பக்திப் பனுவல் கள் மிகமிகப் பயன்படும்.

3. சாத்திரம்: சரித்திரம் என்பது சமய வாழ்வை, அதாவது உயிர் வாழ்வின் மேன்மையினை உணர்ந்த நல் லோர்களுடைய அனுபவங்களை எடுத்துக் கூறுவது. அவர்

கள் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், அவர்கள் வாழ்ந்த வாழ்க்கைமுறை, அவர்கள் செய்த தொண்டு, அவர்கட்கு முழுமுதற்பொருள் என வந்து அருள் செய்த திறன் இக்கூறுபாடுகளைச் சரித்திரத்தின்மூலம் அறியலாம். இதனால், அத்தகைய சான்றோர் சென்ற நெறிகளில், நம்மனோர்க்கு எத்திறம் ஏற்புடையது. எந்த வழியினைக் கடைப்பிடித்தால், நம்மால் இறையருளைப் பெறமுடியும் என்பதை யுணர்ந்து, அவ்வழியினைக் கடைப்பிடிக்க ஏதுவாகும். வாழ்விலும், தாழ்விலும், இன்பத்திலும், துன்பத்திலும் அச்சான்றோர்கள் காட்டிய உறுதியும், விடாப்பிடியும் அன்புச் செயலும், பற்றற்ற நிலையும், சமய வாழ்வை மேற்கொள்வோருக்கு நிலையாமையை உணர்த்தி, உண்மை அறிவை உண்டாக்கி, அன்பினை வளர்த்து, ஆர்வத்தைத் தூண்டி, அருட்செயலை மேற்கொள்ளச் செய்து இறையருளுக்குப் பாத்திரமாக்கும். இத்தகைய மூவகைப்பட்ட நிலையிலும், சமய நூல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. அறிவால் ஆராய்வார்க்குச் சாத்திரமும், அன்பால் கடைப்பிடிப்பார்க்குத் தோத்திரமும், வாழ்க்கைமுறையால் பின்பற்ற முனங்கொள்வார்க்குச் சரித்திரமும் உண்டாக்கிச் சமய உணர்ச்சியையும், சமய அறிவையும், சமய வாழ்க்கையையும், நம் முன்னோர், நமக்குக் கொடுத்து உதவினர் என்று கொள்ளலாம்.

இன்றைய சமயம்: சமயம் கூறும் முப்பொருளைப் போலவே சமய வாழ்வும் முத்திறமாய் இன்று பிரிந்துள்ளது. ஒன்று சமய வாழ்வு, இரண்டு சமய அறிவு, மூன்று சமயப் பணி அல்லது சமயப் பிரசாரம் என்று கொள்ளலாம்.

1. சமய வாழ்வு: சமய வாழ்வு வாழ்வோர் தொகை சுருங்கியுள்ளது என்றால் மிகையாகாது. சமய வாழ்வு என்பது, உலக நிலையாமை யுணர்ந்து, உலகப்பற்று, உடற்பற்று குறைந்து, இறையருளைப்பெற, சரியை, கிரியை யோக ஞானங்களின் வழி நிற்க ஏற்ற பெற்றியில் நிற்பது.

“ நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா ” என்று அறைகூவி யழைத்து நாவுக்கரசர் அருளும் நெறியில் நிற்கும் உரியையாளர் தொகையினை இன்று நாம் காண்பது அரிதாகிவிட்டது. இன்று, திருக்கோயில்களி

லும், திருமடங்களிலும், தொழிலாளிகள் மாலை தொடுத்தல், மெழுகிடல், விளக்கேற்றல் இவற்றைச் செய்யக் காண்கிறோமே யன்றிச் சமய வாழ்வில் தலைப்பட்ட நல்லோர் செய்யக் காண்பது அரிதன்றோ ?

அங்ஙனமே, "படைக்கலமாக உன் நாமத்தெழுத்தைந்தும் என்நாவற் கொண்டேன், இடைக்கலம் அல்லேன் எழுபிறப்பும் உனக்காட் செய்கின்றேன், துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூநீறணிந்துன், அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச் சிற்றம்பலத்தரனே' என்றபடி, ஐந்தெழுத்தும் திருநீறும், சாதனமாக்கொண்டு சிவ பூசை செய்து வாழும் நல்லோர் கூட்டமும் காண்டல் அரிது. " உயிராவணமிருந்து உற்று நோக்கி உள்ளக்கிழியின் உருஎழுதி உயிராவணஞ் செய்திட்டு உன்கைத் தந்தால் உணரப்படுவாரோடு ஒட்டிவாழ்தி' என்றபடி, சமாதிநிலை நிற்கும் அட்டாங்க யோகநிலைப் பெரியோர்கள் கூட்டம் எங்கே ?

விறகில் தீப்போலவும், பாலில் படும் நெய் போலவும், மணியில் ஒலி போலவும், பிரிக்கமுடியாது மறைய நின்றுள்ள மாமணிச்சோதியானை, உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால் முறுக வாங்கிக் கடைந்து முன்னிறுத்தி ஞான ஞாதுரு, ஞேயம் என்ற முப்பொருளில், ஞான ஞாதுரு இழந்து ஞேயமாய் நின்று, சாக்கிரத்தில், துரியாதீதம் செலுத்தும் நல்ல ஞானிகளைக் காண்பதும் அரிதாகி விட்டது. ஆனால், இத்திறத்த நல்லோர் பலர் நம் நாட்டில் வழிவழியாகச் சிறந்து வாழ்ந்தனர் என்ற உண்மைகளை நாமறிகிறோம். இங்ஙனம் வாழவேண்டும், அந்த வாழ்வு மலரவேண்டும். அத்தகைய சமய வாழ்வு வந்தால்தான் நாட்டுக்கும் மொழிக்கும் சமுதாயத்துக்கும்கூட நன்மை பெருகும் என்று உணர்கிறோம். அந்தச் சமய வாழ்வு வளருவதற்கு இன்று நாம் செய்யக்கூடிய செய்யவேண்டிய பணி என்ன ?

சமய அறிவு : சமய அறிவு என்பது, உயிர்களாகிய நாம் பாசங்களினால் கட்டுண்டு, பிறவி எடுத்து வினைப்பயன்களைத் துய்க்கிறோம், இருவினைப்பயன்களைத் துய்த்தலால், உலக நிலையாமை யுணர்ந்து, மெய்யறிவு தலைப்பட்டு நல்

லருள் கூடி இறையடியைச் சார்தல் பிறவியின் பயன் என்று உள்ளவாறு உணர்தல். இந்த அறிவினைப் பெறு தற்கு எண்ணற்ற துறைகளில் முயற்சிகள் நடைபெற வேண்டும். ஒழுக்கம் கடைப்பிடிக்க வேண்டும், நேர்மை, கட்டுப்பாடு, நூலறிவு, நல்லோர் சேர்க்கை, ஆலய வழிபாடு, சாத்திர அறிவு இவை பெறவேண்டும். ஒழுக்கம் என்பது, பிறருடைய பொருளை, பெண்ணை ஆசைப்படாமல் பிறர்க்குத் தன் வாழ்க்கையினல் இடர்ப்பாடின்றி உதவி யாக வாழ்தலே ஒழுக்கமுடைமையாகும். "நல்லது செய்த லாற்றீராயினும், அல்லது செய்தல் ஓம்புமின்" என்ற சான்றோர் வாக்கின்படி, சமய அறிவைப் பெறவேண்டும் என்று கருதுபவர் முதலில் உலகியலில், தீயவழியிற் பொரு ளீட்டலும், தீயவழியில் நடத்துதலும் கூடாது. எங்ஙன மாயினும், கட்டுப்பாடும், நேர்மையும் கடைப்பிடிக்க வேண்டும். கட்டுப்பாடு என்பது, தனக்குத் தானே தீயன நினைத்தல், தீயன பேசுதல், தீயன செய்தலில் புகாதவாறு ஒழுங்குபடுத்திக் கொள்ளுதலாம். இங்ஙனம் நல்ல எண் ணங்களும், நல்ல சொற்களும், பிறர்க்கு உதவும்படியான நல்ல செயல்களும் ஒருவரிடம் மலருமாயின், அவருடைய வாழ்க்கை பிறர்க்கு எடுத்துக்காட்டாய் விளங்குமன்றோ? என்றும் யாரிடமும் இனியனவே கூறும் செய்யும் நல்லோரை, சாதி சமய வேறுபாடின்றி யாவரும் நேசிப்ப ரன்றோ?

அத்தகைய நல்லோர் நின்ற சமயத்தை எச்சமயத் தாரும் போற்றும் நிலை தானே அமையும் அன்றோ? ஆகை யால், சமய அறிவு பெறுவோர், ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை என்ற வரம்பில் நிற்பவர்களாய் இருக்கவேண்டும். அத்தகைய சான்றோர், சமய உண்மைகளை அறிந்தால், அதன்மூலம் சமுதாயத்துக்கு எத்தனையோ நலன்கள் விளையும். இன்றைய நிலையில் அறிவு வளர்ந்திருக்கிறது. சமுதாயத்தில் எழுத்தறிவும், பகுத்தறிவும் வளர்ந்து வருவது உண்மையே. அரசியலும், உலகியலும், எழுத் தறிவையும், பகுத்தறிவையும் வளர்க்கின்றன. உலகம், சிந்திக்கவைக்கிறது. பகுத்தறிவு சிந்தனையால் வளர்கிறது. அரசியல் மக்களை எழுத்தறிவு பெறும்படி ஆண்டுகிறது. அதனல், இன்றைய இளைய உலகம், எழுத்தறிவும், பகுத்

தறிவும் இயல்பாக முன்னைவிடப் பல்கி வளர்கிறார்கள். அவர்கட்கு, ஒழுக்க அறிவும், கட்டுப்பாடும், நேர்மையும் கற்பிக்கப்படவேண்டும். அப்போதுதான் சமய அறிவின் உண்மையும், அதன் தேவையும், அச்சமய அறிவால் வாழ்க்கை மலரும் என்ற அடிப்படையும் அவ்விளைஞர்கட்கு விளங்கும். அதனால், சமய அறிவு பெறுவோர் இத்துறையில், சிறந்தவர்களாய் இருக்கவேண்டும். அங்ஙனம் ஒழுங்கு, கட்டுப்பாடு, நேர்மை முதலியன ஓங்கப்பெற்றவர்களே சமய சாத்திர தோத்திர சரித்திரங்களை ஒழுங்காக முறைப்படி ஓதியுணரவேண்டும். அப்போதுதான், அந்நூல்களினுடைய நோக்கம், அந்நூல்கள் சமுதாயத்துக்குப் பயன்படவேண்டியவகை. அதனைக் கையாளும் முறை தெரிந்து தெளிந்து பயன்படுத்த முடியும், இந்த நிலை இன்றைக்கு இல்லை. மறைந்தன. மீளுபடியும், புதுப்பிக்க முயற்சிக்க வேண்டும். இல்லையேல், சமய அறிவு பெறுவோர் தொழிற் கல்விபோலப் பயின்று, அதன்பாலும் பற்றின்றி, பயனின்றி அந்நூல்களையே குறைகூறிக் கழிவர். இன்றைக்குச் சமய நூல்கள் குறைகூறப்படுவதன் காரணம் இதுதான்.

இன்றைய இளைஞர் உலகத்தையும், பகுத்தறிவு உலகத்தையும் பொதுமக்களையும் சமயம் கவரவேண்டுமானால், சமய அறிவு பெறுவோர் வாழ்வில், காணப்படும் மாற்றமே கவரவேண்டும். அவர்கள் தன்னலமற்ற வாழ்வில் அடிவைக்கவேண்டும். அவர்கட்குக் கோஷ்டிபங்கள் கூடா. யாரிடமும் இனிய கிளத்தல்வேண்டும், தொண்டு மலரவேண்டும். அவர்களது சொல்லும் செயலும் அவர்களது சமயப் பற்றையும், சமய அறிவையும், உண்மை என்று உலகம் ஏற்றுக்கொள்ளும் வகையில் அவர்கள் வாழ்வு நடைபெறவேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டாவோ?

(தொடரும்)